இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயப்பெறுமதியிலான நிதிச் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயமான பெறுமதியில் தொடக்க அங்கீகாரத்தின் மீது பெயரிடப்பட்ட வியாபார மற்றும் நிதி சொத்துக்களுக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்களை உள்ளடக்குகின்றது. நிதிச் சொத்துக்கள் சமீபத்திய தவணைக்காலத்தில் விற்பதற்கான அல்லது மீள் கொள்வனவு செய்யப்படுவதற்கான நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட வைகளாக இருக்குமிடத்து அவை பிடித்து வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயமான பெறுமதியில் உள்ள நிதிச் சொத்துக்கள் நிதி நிலைமையின் கூற்றில் நிதிக் கூற்றிலான நிதி வருமானத்தில் அல்லது நிதிச் செலவுகளில் அங்கீகரிக்கப்படும் நியாயமான பெறுமதியிலான மாற்றங்களுடன் நியாயமான பெறுமதியிலான நிதி நிலைமையின் கூற்றில் கொண்டு வரப்படுகின்றன. ஆகக்கிட்டிய தவணைக்காலத்தில் மூலங்களிலிருந்து பெறப்பட்டவைகள் நீங்கலாக வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் தனது நிதிச் சொத்துக்களை அவை விற்கப்படுவதற்கான நோக்கம் இன்னும் பொருத்தமானதாக உள்ளதா என்பதை தீர்மானிப்பதற்காக தனது வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்களை மதிப்பீடு செய்கின்றது. செயற்படாத நிலையில் உள்ள சந்தைகள் காரணமாக இந்த நிதிச் சொத்துக்களின் விபரத்தை இக்கூட்டுத்தாபனமானது செய்ய முடியாமல் இருந்து அவற்றை முன்னரே காணக்கூடிய எதிர் காலத்தில் விற்பதற்கான முகாமைத்துவபீடத்தின் நோக்கத்துடனும் இக்கூட்டுத்தாபனமானது அரிதான நிலைமைகளில் இந்த நிதிச் சொத்துக்களை மீள் வகைப்படுத்தல் செய்யும் முறையை தெரிவு செய்யலாம். விற்பனைக்கு கிடைக்கக்கூடியனவாக அல்லது முதிர்ச்சியடையும் வரை வைத்திருக்கப்படும் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளும் மீள் வகைப்படுத்தல் சொத்தின் தன்மையில் தங்கியுள்ளது. இந்த மதிப்பீடு பெயரிடலின் நியாயப் பெறுமதி விருப்பத் தேர்வை பயன்படுத்தி இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயமான விலையில் பெயரிடப்பட்ட எந்த நிதிச்சொத்துக்களையும் பாதிக்கமாட்டாது.

01.2.2.14.4 கடன்களும் பெறத்தக்கவைகளும்

கடன்களும் பெறத்தக்கவைகளும் சுறுசுறுப்பான சந்தையொன்றில் எடுத்துக்காட்டப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கப்படத்தக்க கொடுப்பனவுகளுடன் மூலத்திலிருந்து பெறப்படாத நிதிச் சொத்துக்களாகும். தொடக்க அளவீட்டிற்குப் பின்னர் அத்தகைய நிதிச் சொத்துக்கள் சேதத்தைக் கழித்து விளைபயனுள்ள வட்டிவீத முறையைப் பயன்படுத்தி கடன் தீர்வு செய்யப்பட்ட விலையில் அளவிடப்படுகின்றன. கடன் தீர்வு செய்யப்பட்ட செலவானது விளைபயனுள்ள வட்டி வீத நிறையின் ஒருங்கிணைந்த பகுதியான கொள்ளல் மீதான எந்த கழிவையும் அல்லது கட்டுப்பணத்தையும் கட்டணங்களையும் அல்லது செலவுகளையும் கணக்கிற்கு எடுத்துக் கொண்டு கணிக்கப்படுகின்றது. பயன்விளைவுள்ள வட்டி வீத முறை கடன் தீர்த்தல் வருமானக் கூற்றில் நிதி வருமானத்தின் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. சேதத்திலிருந்து எழும் நட்டங்கள் நிதிச் செலவுகளிலுள்ள வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

01.2.2.14.5 முதிர்ச்சியடையும் வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள்

நிலையான அல்லது நிர்ணயிக்கப்படத்தக்க கொடுப்பனவுகளுடனான மூலத்திலிருந்து பெறப்படாத நிதிச் சொத்துக்களும் நிலையான முதிர்ச்சிகளும் இக்கூட்டுத்தாபனமான அவற்றை முதிர்ச்சியடையும் வரை வைத்திருக்கக் கூடிய சாதகமான நோக்கத்தையும் திறனையும் கொண்டிருக்கும் போது அவற்றை முதிர்ச்சியடையும் வரை வைத்திருக்கப்படும் விடயங்களாக அவை வகைப்படுத்தப்படலாம். தொடக்க அளவீட்டிற்குப் பின்னர் முதிர்ச்சியடையும் வரை வைத்தி ருக்கப்படும் முதலீடுகள் சேதத்தைக் கழித்து விளைபயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி கடன்தீர்வு செய்யப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றன.

பயன்விளைவுள்ள வட்டி வீதத்தின் ஓர் இணைந்த பகுதியாகவுள்ள கொள்ளல் மற்றும் கட்டணங்கள் அல்லது செலவுகளின் மீதான எந்த கழிவையும் அல்லது கட்டுப்பணத்தையும் கணக்கிற்கு எடுப்பதன் மூலம் கடன் தீர்வு செய்யப்பட்ட செலவு கணக்கிடப்படுகின்றது. பயன்விளைவுள்ள வட்டிவீத கடன் தீர்த்தல் வருமானக் கூற்றில் உள்ள நிதி வருமானத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. சேதத்திலிருந்து எழும் நட்டங்கள் நிதிச் செலவுகளில் உள்ள வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

01.2.2.14.6 விற்பனைக்குக் கிடைக்கக்கூடியனவாகவுள்ள நிதி முதலீடுகள்

சம பங்குகளையும் கடன் பிணையங்களையும் உள்ளடக்குகின்றன. விற்பனைக்குக் கிடைக்கக்கூடியனவாக வகைப்படுத்தப்பட்ட சம பங்கு முதலீடுகள் என்பதை இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயமான பெறுமதியில் வியாபாரத்திற்கு வைத்திருக்கப்பட்ட அல்லது பெயரிடப்பட்டவைகளல்ல. கடன் பிணையங்கள் என்பதை வரையறையற்ற காலப்பகுதியொன்றுக்கு வைத்திருக்கப்படுவதற்கு கருதப்பட்டவைகளாகும் என்பதுடன் அவை சண்டை நிலைமைகளில் உள்ள திரவத்தன்மைக்கான தேவைகளுக்கு அனுசரணையாக அல்லது மாற்றங்களுக்கு அனுசரணையாக விற்கப்படலாம்.

தொடக்க அளவீட்டிற்குப் பின்னர் விற்பனைக்கு கிடைக்கக் கூடியனவாகவுள்ள நிதி முதலீடுகள் பின்னர் முதலீடு அங்கீகரிக்கப்படாமல் விடும் வரைக்கும் விற்பனைக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள ஒதுக்கத்தில் உள்ள பிற விரிவான வருமானமாக தேறாத இலாபங்கள் அல்லது நட்டங்களுடன் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றது. அந்நேரத்தில் பிற தொழிற்பாட்டு வருமானத்தில் உள்ள திரண்ட இலாபம் அல்லது நட்டம் நிதிச் செலவுகளில் உள்ள வருமானக் கூற்றுக்கு திரண்ட நட்டமாக மீள்வகைப்படுத்தப்படுகின்றது. கூட்டுத்தாபனம் விற்பனைக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதிச் சொத்துக்களை அவற்றை கிட்டிய தவணைக்காலத்தில் விற்பதற்கான இக்கூட்டுத் தாபனத்தின் திறனும் நோக்கமும் இன்னும் பொருத்தமாகவுள்ளதா என்பதை மதிப்பீடு செய்கின்றது. சுறுசுறுப்பில்லாத சந்தை நிலைமைகளின் காரணமாக இந்த நிதிச் சொத்துக்களை வியாபாரப்படுத்துவதற்கு இக் கூட்டுத்தாபனம் இயலாத நிலையிலிருந்து முகாமைத்துவ பீடமானது முன்னதாகவே காணக்கூடிய எதிர்காலத்தில் கணிசமான அளவை மாற்றங்களை ஏற்படுத்துமென கருதுமிடத்து இக்கூட்டுத்தாபனமானது இந்த நிதிச் சொத்துக்களை அரிதான நிலைமைகளில் மீள்வகைப்படுத்துவதற்கு தெரிவு செய்யலாம். கடன்களுக்கும் பெறத் தக்கவைகளுக்குமான மீள் வகைப்படுத்தல் நிதிச் சொத்துக்கள் கடன்களினதும் பெறத்தக்க வைகளினதும் மீள் வரைவிலக் கணப்படுத்தலை எதிர்நோக்கக் கூடியதாக இருக்குமிடத்து அனுமதிக்கப்படுமென்பதுடன் இக்கூட்டுத் தாபனமானது இச் சொத்துக்களை முன்னதாகக் காணக்கூடிய எதிர் காலத்திற்கு அவை முதிர்ச்சியடையும் வரை இச்சொத்துக்களை வைத்திருப்பதற்கான நோக்கத்தையும் திறமையையும் கொண்டிருக்குமிடத்து அது அனுமதிக்கப்படும். முதிர்ச்சியடையும் வரை வைத்திருத்தல் வகுதிக்கான மீள் வகைப்படுத்தல் அந்த நிறுவன மானது நிதிச் சொத்துக்களை வைத்திருக்கக்கூடிய திறனையும் நோக்கத்தையும் கொண்டிருக்குமிடத்து மட்டுமே அனுமதிக்கப்படும். விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய வகுதிக்கு வெளியே நிதிச் சொத்தொன்று மீள் வகைப்படுத்தப்படுவதற்கு அச்சொத்தின் மீது எந்த முன் இலாபம் அல்லது நட்டம் சம அளவில் அங்கீகரிக்கப்பட்டு விளைபயன் வட்டி வீதத்தைப் பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய சீவிய காலப்பகுதியில் கடன் தீர்வை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படும் காசுப் பாய்ச்சல்கள் இருக்குமிடத்து கடன் தீர்வு செய்யப்படும். புதிய கடன் தீர்வு செய்யப்பட்ட செலவுக்கும் எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சல் களுக்குமிடையே உள்ள எந்த வித்தியாசமும் கூட விளைபயனுள்ள வட்டி வீதங்களை பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய சீவிய காலத்தின் கடன்தீர்வு செய்யப்படுகின்றது. சொத்தானது பின்னர் சேதமடைந் ததாகத் தீர்மானிக்கப்படுமிடத்து சமபங்கில் பதிவு செய்யப்பட்ட தொகை வருமானக்கூற்றிற்கு மீள்வகைப்படுத்தப்படுகின்றது.

01.2.2.14.7 அங்கீகாரம் வழங்கப்படாமை

ஒரு நிதிச்சொத்தானது அது பின்வருவன நிகழ்ந்திருக்குமிடத்து அங்கீகாரம் வழங்கப்படாமல் விடப்படும். (அல்லது ஏற்புடைத்தான தாகவிருக்குமிடத்து நிதிச் சொத்தின் பகுதியொன்று அல்லது இதைப்போன்ற நிதிச் சொத்துக்களின் கூட்டுத்தாபன மொன்றின் பகுதி.)

- சொத்திலிருந்து காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமைகள் முடிவடைந்திருக்குமிடத்து.

- “அனுமதித்தல்” ஒழுங்கொன்றின் மூலம் மூன்றாந் தரப்பிற்கு கணிசமான

தாமதமின்றி பெற்றுக் கொண்ட காசுப் பாய்ச்சல்களை கொடுப்பனவு செய்வதற்காக சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல் ளைப் பெறுவதற்கான தனது உரிமைகளை அல்லது அவற்றைக் கொடுப்பதற்கான கடப்பா டான்றை பொறுப்பேற்றிருக்கு ிடத்தும் மற்றும் (அ) இகூட்டுத்தாபனமானது சொத்தின் சகல இடர்ப்பாடுகளையும் வெகுமதிகளையும் கணிசமான அளவில் மாற்றியிருக்குமிடத்து அல்லது அத்துடன் (ஆ)கூட்டுத்தாபனமானது சொத்தின் சகல இடர்ப்பாடு ளையும் வெகுமதிகளையும் கணிசமான அளவில் மாற்றியிராமல் இருக்குமிடத்து அல்லது பிடித்து வைத்திருக்குமிடத்து ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றியிருக்குமிடத்தும்.

இக்கூட்டுத்தாபனமானது சொத்தொன்றிலிருந்து காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கான தனது உரிமைகளை மாற்றியிருக்குமிடத்து அல்லது அனுமதித்தல் ஒழுங்கொன்றைச் செய்திருக்குமிடத்தும் சொத்தின் சகல இடர்ப்பாடுகளையும் வெகுமதிகளையும் மாற்றியிராமல் இருக்குமிடத்து அல்லது வைத்திருக்காமல் இருக்குமிடத்து சொத்தானது அதில் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்து கொண்டிருக்கு மிடத்தில் ஈடுபாட்டின் அளவிற்கு சொத்து அங்கீகரிக்கப்படுகின்றது.

அப்படியிருக்குமிடத்து இக்கூட்டுத்தாபனமானது கூட்டுப் பொறுப் பொன்றையும்ட அங்கீகரிக்கின்றது. மாற்றப்பட்ட சொத்தும் சம்பந்தப்பட்ட பொறுப்பும் கூட்டுத்தாபனமானது வைத்திருக்கும் உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற அடிப்படை யான்றில் அளவிடப்படுகின்றது.

மாற்றப்பட்ட சொத்துக்கான உத்தரவாதம் ஒன்றின் வடிவத்தை எடுக்கின்ற தொடரும் ஈடுபாடு சொத்தின் கொண்டு செல்லப்படும் மூலத்தொகையில் குறைந்த தொகையிலும் இக்கூட்டுத்தாபனமானது மீள் கொடுப்பனவு செய்ய வேண்டுமெனத் தேவைப்படுத்தக்கூடிய பணத்தொகையின் உச்சத்தொகையிலும் அளவிடப்படுகின்றது.

01.2.2.14.8 நிதிச் சொத்துக்களின் சேதம்

இக்கூட்டுத்தாபனமானது அறிக்கையிடல் திகதி ஒவ்வொன்றிலும் கூட்டுத்தாபனமொன்றின் நிதிச் சொத்தானது அல்லது நிதிச் சொத்துக்களானவை சேதமடைந்துள்ளனவா என்பதற்கு ஏதேனும் பொருள் ரீதியான சான்று உள்ளதா என மதிப்பீடு செய்கின்றது. கூட்டுத்தாபனமொன்றின் நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாக கருதப்பட்டு சொத்தானது தொடக்கத்தில் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட சேதமடைதலுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளின் காரணமாக சேதம் ஏற்பட்டதற்கான பொருளளவிலான சான்று இருக்குமிடத்து (இழப்பு நிகழ்வு நிகழ்ந்திருக்குமிடத்து) அந்த நட்ட நிகழ்வானது நிதிச் சொத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் நிதிச்சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் மீது அல்லது நம்பத்தக்க முறையில் மதிப்பிடப்படுவதன் மீது தாக்கமொன்றை கொண்டிருக்குமிடத்து மட்டுமே அது சேதமடைந்ததாக கருதப்படும்.

சேதத்திற்கான சான்று கடன் பெறுபவர்கள் அல்லது கடன் பெறுபவர்களின் கூட்டுத்தாபனமொன்று கணிசமான நிதிக்கஸ்டத்தை அல்லது வட்டியில் அல்லது முதல் கொடுப்பனவுகளில் தவறுகையை அல்லது கடமை தவறுதல் காரணமாக கூட்டுத்தாபனமானது வங்குரோத்து நிலையை அடையும் அல்லது பிற நிதி மீளமைப்பை வேண்டுகின்ற சாத்தியத்தகவு இருக்குமிடத்தும் கணிப்பிடத்தக்க தரவானது தவறுகளுடன் தொடர்புடைய நிலுவைகளிலான மாற்றம் அல்லது பொருளாதார நிலைமைகளிலான மாற்றம் போன்ற விடயங்கள் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களில் அளவிடத்தக்க குறைவைக் காட்டலாம்.

01.2.2.15 நிதிப் பொறுப்புக்கள்

01.2.2.15.1 இலாபம் அலலது நட்டம் மூலமாக நியாயப் பெறுமதியில் நிதிப் பொறுப்புக்கள்

இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயமான பெறுமதியில் உள்ள நிதிப்பொறுப்புக்கள் இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயமான பெறுமதியில் தொடக்க அங்கீகாரம் மீது வியாபாரத்திற்கும் வியாபார மற்றும் நிதிப பொறுப்புக்களுக்கான நிதிப் பொறுப்புக்களை உள்ளாக்குகின்றது. வருமானக்கூற்றில் வியாபாரத்திற்காக வைத்திருக்கப்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானப் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. இக் கம்பனியானது இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயமான

பெறுமதியில் தொடக்க அங்கீகாரத்தின் மீது எந்த நிதிப் பொறுப்புக்களையும் பெயர் குறிக்கவில்லை.

01.2.2.15.2 கடன்களும் கடன்படல்களும்

தொடக்க அங்கீகாரத்திற்குப் பின்னர் விளைபயனுள்ள வட்டிவீத முறையை பயன்படுத்தி கடன்தீர்வு செய்யப்பட்ட செலவின் பின்னர் வட்டியுடைய கடன்களும் கடன்படல்களும் அளவிடப்படுகின்றன. பொறுப்புக்கள் அங்கீகரிக்காமல் விடப்படும் போது வருமானக் கூற்றிலும் பயன்விளைவுள்ள வட்டி வீத முறை கடன் தீர்த்தல் நடைமுறை மூலமாகவும் வருமானக்கூற்றில் அங்கீகரிக் கப்படுகின்றன.

கடன்தீர்வு செய்யப்பட்ட செலவு பயன்விளைவுள்ள வட்டி வீத முறையின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகவுள்ள எந்தக் கொள்ளல் மற்றும் கட்டணங்கள் அல்லது செலவுகள் மீதான எந்த கழிவையும் அல்லது கட்டுப்பணத்தையும் கணக்கிற்கு எடுத்துக் கொண்டு கணிக்கப்படுகின்றது. பயன்விளைவுள்ள வட்டி வீத கடன் தீர்வு வருமானக்கூற்றில் நிதிச் செலவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

01.2.2.15.3 அங்கீகரிக்காமல் விடப்படுகை

கடன் பொறுப்பொன்றின் கீழ் உள்ள கடப்பாடு நிறைவேற்றப்படுவதன் கீழ் அல்லது இரத்து செய்யப்படுவதன் கீழ் அல்லது காலாவதியாவதன் கீழ் நிறைவேற்றப்படும் போது நிதிப் பொறுப்பானது அங்கீகரிக்காமல் விடப்படுகின்றது.

ஏற்கனவேயுள்ள நிதிப்பொறுப்பானது கணிசமான வித்தியாசமான நியதிகளின்மீது அல்லது ஏற்கனவேயுள்ள பொறுப்பொன்றின் நியதிகள் கணிசமான அளவில் திருத்தப்படும் போது அதன் மீதான கடன் வழங்குபவரிடமிருந்து மற்றொருவருக்கு பதிலீடு செய்யப்படும் பொழுது அத்தகைய பரிமாற்றம் அல்லது திருத்தம் மூலப்பொறுப்பின் அங்கீகரிக்கப்படாததமையாக கருதப்பட்டு புதிய பொறுப்பொன்றின் அங்கீகாரமும் அந்தந்த கொண்டு செல்லப்படும் தொகைகளிலான வித்தியாசமும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

01.2.2.15.4 நிதி சாதனங்களில் எதிரீடு செய்தல்

அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடு செய்வதற்கு தற்போது நடைமுறைப்படுத்தத்தக்க சட்ட உரிமை இருந்து தேறிய அடிப்படையொன்றில் அதைத் தீர்வு செய்வதற்கான எண்ணம் இருந்தாலும் அல்லது சொத்துக்களை தேறச் செய்வதற்கு எண்ணம் இருந்தாலும் சமகாலத்து பொறுப்புக்களை தீர்வு செய்வதற்கு என்ணம் இருந்தாலும் மாத்திரமே நிதி நிலைமைக்கூற்றில் அறிக்கை செய்யப்பட்ட தேறிய தொகையும் நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் நிதி நிலைக்கூற்றில் அறிவிக்கப்பட்ட தேறிய தொகையும் எதிரீடு செய்யப்படும்.

01.2.2.16 நிதியல்லாத சொத்துக்களின் சேதம்

இக்கூட்டுத்தாபனமானது அறிக்கையிடல் திகதியொவ்வொன்றிலும் சொத்தொன்று சேதமடையலாம் என்பதற்கான சுட்டிக் காண்பிப்பொன்று இருக்கின்றதா என்பதை மதிப்பீடு செய்கின்றது. அத்தகைய சுட்டிக் காண்பித்தல் எதுவும் இருக்குமிடத்து அல்லது சொத்தொன்றின் வருடாந்த சேதமடைதல் பரிசோதனையொன்று தேவைப்படுமிடத்து இக்கூட்டுத்தாபனமானது சொத்தின் அறிவிடப்பட்ட தொகையின் மதிப்பீடொன்றைச் செய்கின்றது. ஒரு சொத்தின் அறிவிடத்தக்க தொகையென்பது சொத்தின் நியாயமான பெறுமதியில் விற்பதற்கான செலவுகளைக் கழித்தும் உபயோகத்தில் உள்ள அதன் பெறுமதியைக் கழித்தும் உயர்ந்த பெறுமதியிலான தொகையாகுமென்பதுடன் அச்சொத்தானது பிற சொத்துக்களிலிருந்து வேறுபட்டுப் பெருமளவில் சுதந்திரமான காசு உட்பாய்ச்சல்களை பிறப்பிக்காமல் இருந்தாலன்றி ஒரு தனிப்பட்ட சொத்தாக தீர்மானிக்கப்படுகின்றது.சொத்தொன்றின் கொண்டுசெல்லப்படும் தொகையானது அறவிடத்தக்க தொகையை விஞ்சுமிடத்து அச் சொத்து சேதமடைந்தாக கருதப்பட்டு அதன் அறிவிடத்தக்க தொகைக்கு எழுதப்படுகின்றது. பயன்பாட்டில் உள்ள பெறுமதியை மதிப்பிடும் போது மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் பணத்தின் காலப்பெறுமதியினதும் அச்சொத்திற்கு குறித்துரைக்கத் தக்க இடர்ப்பாடுகளினதும் தற்போதைய சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கும் முன்வரிக் கழிவு வீதத்தைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிக்கப்படுகின்றது.

முன்னைய மீள் மதிப்பீட்டு மிகையை திசைதிருப்பும் அளவிற்கு பிற விரிவான வருமானக்கூற்று மூலமான மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு எதிராக முன்னர் மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் தொடர்பில் சேத நட்டங்கள் நீங்கலாக வருமானக்கூற்றில் சேத நட்டங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. முன்னர் அங்கீகரிக்கப்பட்ட சேத நட்டங்கள் இனிமேலும் இருக்கமாட்டா அல்லது குறைந் திருக்கப்படலாம் என்பதற்கான சுட்டிக்காட்டுதல் எதுவும் இருக்கின் றதாவென்பதைப் பற்றி அறிக்கையிடல் பிரதி ஒவ்வொன்றிலும் ஒரு மதிப்பீடு செய்யப்படுகின்றது. அத்தகைய சுட்டிக்காட்டுதல் நிலவுமிடத்து அறவிடத்தக்க தொகையானது மதிப்பிடப்படுகின்றது. கடைசி சேத நட்டமானது அங்கீகரிக்கப்பட்ட திலிருந்து சொத்தின் அறவிடப்படத்தக்க தொகையை நிருணயிப்பதற்காக பயன்படுத் தப்படும் மதிப்பீடுகளின் மாற்றமொன்று இருந்திருந்தால் மட்டுமே முன்னர் அங்கீகரிக்கப்பட்ட சேத நட்டமானது மறுதலையாக்கப்படும். இந்த விடயம் அப்படியானதாக இருக்குமிடத்து சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகை அதன் அறவிடத்தக்க தொகைக்கு அதிகரிக்கப்படும். முந்திய ஆண்டுகளில் சொத்துக்கான சேத நட்டம் எதுவும் அங்கீகரிக்கப்படாமல் இருக்குமிடத்து மதிப்பிறக்கத்தின் நிகரத் தொகையாகவுள்ள அந்த அதிகரித்த தொகை கொண்டு செல்லும் தொகையை விஞ்சமாட்டாது. அந்த மறுதலையானது ஒரு மீள் மதிப்பீட்டு அதிகரிப்பாக மீள் மதிப்பிடத்தக்க தொகையில் சொத்தானது கொண்டு செல்லப்பட்டாலன்றி நிதிக்கூற்றில் அங்கீகரிக்கப்படும். அத்தகை மறுதலையாக்கலுக்குப் பின்னர் அதன் எஞ்சியுள்ள பயனுள்ள சீவிய காலத்தில் முறைமையான அடிப்படையொன்றின் மீது விஞ்சியுள்ள எந்தப் பெறுமதியையும் கழித்து சொத்தின் திருத்தப்பட்ட முன்கொண்டு செல்லும் தொகையை குறித்தொதுக்குவதற்காக எதிர்காலப் பகுதிகளில் மதிப்பிறக்கக் கட்டணமானது சீராக்கல் செய்யப்படுகின்றது.

01.2.2.17 வரிகள்

இக்கூட்டுத்தாபனமானது பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை உள்ளடக்கி வருமான வரிக்கும் பிற வரிகளுக்கும் உட்பட்டதாகும். நிதிக்கூற்றுக்களில் இலங்கை நிதி ஒழுங்கு விதிகளின்/இலங்கை கணக்கீட்டு நியமங்களின் மேற்கொள்ளுகையினதும் வரிகள் விதிக்கும் நோக்கத்திற்கான வரி விதிக்கத் தக்க இலாபமும் கையாளுவது மீதான வரி வழிகாட்டல்களின் விடயத்தைப் பொறுத்து தற்போதைய பிற்போடப்பட்ட வரிகளும் பிற வரிகளுக்குமான மொத்த ஏற்பாட்டை நிருணயிப்பதற்கு கணிசமான கருத்து தேவைப்பட்டது.

01.2.2.18.1 தற்போதைய வரி

தற்போதைய வரி என்பது அறிக்கையிடல் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமான அளவில் இயற்றப்பட்ட வரி வீதங்களையும் முந்திய ஆண்டுகளின் தொடர்பில் கொடுபடத்தக்க வரிக்கான எந்தச் சீராக்கலையும் பயன்படுத்தியும் இவ்வாண்டுக்கான வரி விதிக்கப்படத்தக்க வருமானம் மீது கொடுபடத்தக்கதாக எதிர்பார்க்கப்படும் வரியாகும்.

வருமான வரிக்கான ஏற்பாடு என்பது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தினதும் அதனுடைய திருத்தங்களினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிதிக் கூற்றுக்களில் அறிவிக்கப்பட்டனவும் கணனியிடப்பட்டவையுமான வருமானம் மற்றும் செலவின அமிசங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

01.2.2.18.2 பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரி விதிப்பு என்பது நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அறிக்கையிடல் திகதியில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வரி அடிப்படைகளையும் அவற்றின் கொண்டு செல்லும் தொகைகளுக்கும் இடையேயுள்ள தற்காலிக வேறுபாடுகளின் மீதான பொறுப்பு முறையைப் பயன்படுத்தி வழங்கப்பட்டுள்ளது. பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் சகல தற்காலிக வேறுபாடுகளுக்குமாக அங்கீகரிக்கப்படுகின்றன. பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்கும் பயன்படுத்தப்படாத வரி வரவுகளின் முன்னெடுத்துச் செல்லலுக்கும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்களுக்கும் எதிராக வரி விதிக்கத் தக்க இலாபமானது கிடைக்கத்தக்க சாத்தியமான அளவுக்கும் பயன்படுத்தப்படலாம். பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகையானது அறிக்கையிடல் திகதி ஒவ்வொன்றிலும் மீளாய்வு

செய்யப்பட்டு சகல அல்லது பகுதியளவிலான பிற்போடப்பட்ட வரிச் சொத்து பயன்படுத்தப்படுவதை அனுமதிப்பதற்காக போதியளவு வரி விதிக்கத்தக்க இலாபம் இனியும் கிடைப்பது சாத்தியமில்லை என்ற அளவுக்கு குறைக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்படாத பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு பிற்போடப்பட்ட வரிச்சொத்து அறவிடப்படு வதற்கு எதிர்கால வரி விதிக்கத்தக்க இலாபமானது அனுமதிப் பதற்குச் சாத்தியமாகவுள்ள அளவுக்கு அங்கீகரிக்கப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில் இயற்றப்பட்ட அல்லது கணிசமான அளவில் இயற்றப்பட்ட வரிச்சட்டங்கள் மற்றும் வரி வீதங்களின் அடிப்படையில் சொத்தானது தேறும்போது அல்லது கடன் பொறுப்பு தீர்வு செய்யப்படும் போது அந்த ஆண்டிற்கு ஏற்புடைத்தாகுமென எதிர்பார்க்கப்படும் வரிவீதங்களில் அளவிடப்படுகின்றன. சம அளவில் அங்கீகரிக்கப்படும் விடயங்கள் தொடர்பிலான வருமான வரி சம பங்கில் அங்கீகரிக்கப்படுகின்றன.

அதே வரி விதிக்கத்தக்க நிறுவனமும் அதே வரி விதிப்பு அதிகாரபீடம் தொடர்பில் தற்போதைய வரி பொறுப்புக்களுக்கும் பிற்போடப்பட்ட வரிகளுக்கும் எதிராக தற்போதைய வரிச் சொத்துக்களை எதிரீடு செய்வதற்கு சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தத் தக்க உரிமை இருக்குமிடத்து பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்களும் பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுகின்றன. பிற்போடப்பட்ட வரியானது நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அறிக்கையிடல் திகதியில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் அவற்றின் கொண்டு செல்லப்படும் தொகைகளினதும் வரி அடித்தளங்களுக்கிடையேயுள்ள தற்காலிக வேறுபாடுகள் மீது பொறுப்பு முறையை பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி வழங்கப்படுகின்றது.

01.2.2.19 பணியாளர் நலன் பொறுப்பு

இக்கூட்டுத்தாபனத்தின் பணியாளர் நலன் பொறுப்பு 19 ஆம் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் “பணியாளர் நலன்கள்” 57 ஆம் பிரிவு இணைப்பு னு (2) இன் பிரகாரம் பணிக்கொடை மீதான சூத்திரத்தை இக்கூட்டுத்தாபனத்தின் பணியாளர் நலன்புரி பொறுப்பு அடிப்படையாகக் கொண்டுள்ளது. சூத்திர மதிப்பிடல்கள் கழிவு வீதங்களையும் எதிர்காலச் சம்பள அதிகரிப்புகளையும் பற்றிய ஊகங்களை சம்பந்தப்படுத்துகின்றன. பெறுமான மதிப்பிடலின் பல்வகைமையும் அடிப்படையாகவுள்ள ஊகங்களின் அதன் நீண்ட தவணைக்காலத் தன்மையும் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடும் இந்த ஊகங்களில் உள்ள மாற்றங்களுக்கு உயர் உணர்வுள்ளவைகளாக உள்ளன. சகல ஊகங்களும் அறிக்கையிடல் திகதி ஒவ்வொன்றிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளில் பயன்படுத்தப்படுகின்ற முக்கிய ஊகங்களின் விபரங்கள் 10 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளன.

01.2.3 விரிவான வருமானக் கூற்று

01.2.3.1 வருமான அங்கீகாரம்

வருமானம் என்பது இக்கூட்டுத்தாபனத்திற்கு சாத்தியமாக கிடைக்கக்கூடிய பொருளாதார நலன்களும் பாய்ச்சலின் அளவிற்கு அங்கீகரிக்கப்படுகின்றதுடன் பெறுமதி உட்பட அல்லது உட்பட்ட மற்றும் சம்பந்தப்பட்ட செலவுகளை நம்பத்தக்க விதத்தில் அளவிட முடியும். வருமானமானது கூட்டுத்தாபனத் திற்குள் உள்ள விற்பனைகளை நீக்கி பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்படவுள்ள சன்மானத்தின் நியாயமான பெறுமதியிலும் நிகர வியாபார கழிவுகளிலும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக-ளிலும் அளவிடப்படுகின்றது.

பின்வரும் விசேட தகவுத் திறன்கள் வருமானத்தை அங்கீகரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

(அ) வருமானம்

இக்கூட்டுத்தாபனமானது வழக்கமாக உடைமையுடன் சம்பந்தப்பட்ட அளவுக்கு அல்லது விற்கப்பட்ட பொருட்கள் மீது பயன்விளைவுள்ள கட்டுப்பாட்டை வைத்திருக்கும் அளவுக்கு தொடர்ச்சியான முகாமைத்துவ ஈடுபாடொன்றை வைத்திருக்குமிடத்து வாங்கு வருக்கு பொருட்களின் உடைமையை

வழங்குவதிலான கணிசமான இடர்ப்பாடும் பொருட்களின் உடைமையளிப்புக்களும் செய்யப்படும் போது பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைக்கும் வருமானம் அங்கீகரிக்கப்படும்.

(ஆ) சேவைகள் வழங்குதல்

சேவைகளை வழங்குவதிலிருந்து கிடைக்கும் வருமானம் அவற்றின் பூர்த்தி செய்யப்படும் அளவிற்கமைய அங்கீகரிக்கப்படுகின்றது. ஒப்பந்த பெறுபேறு நம்பத்தக்க முறையில் அளவிடப்படமுடியாமல் இருக்குமிடத்து வருமானம் உறப்பட்ட செலவினம் எந்த அளவிற்கு அறவிடப்படுவதற்குத் தகுதியுடையவையாக இருக்கின்றதோ அந்த அளவிற்கு மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றது.

(இ) நிர்மாண ஒப்பந்தங்கள்

ஒப்பந்தத்தின் பெறுபேறு நம்பத்தக்க முறையில் அளவிடப்படக்கூடியதாக இருக்கும் போது ஒப்பந்த வருமானம் ஐந்தொகைத் திகதியில் இருந்தவாறான ஒப்பந்த செயற்பாட்டின் பூர்த்தி செய்தல் கட்டத்தின் தொடர்பினால் அங்கீகரிக்கப்படுகின்றது. மேலும் இக்கூட்டுத்தாபனமானது வாடிக்கையாளரிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட வேலைச் சான்றுப்படுத்தலை பெற்றதன் பின்னர் மட்டுமே நிர்மாண வருமானத்தை அங்கீகரிக்கின்றது. குறித்த ஒப்பந்தங்கள் மீதான எந்த எதிர்பார்க்கப்படும் நட்டங்களும் அவற்றின் வருமானத்தில் இணையொத்த கழிவொன்றுக்குப் பின்னர் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஈ) வட்டி வருமானம்

வட்டி வருமானம் வட்டி பிறப்பிக்கும் சொத்துக்கள் மீதான விளைபயனுள்ள வட்டி வீதத்தை கணக்கிற்கு எடுத்துக் கொண்டு கால விகித அடிப்படையொன்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

(உ) பங்கு இலாபம்

பங்கு இலாப வருமானம் கொடுப்பனவைப் பெறுவதற்கான இக்கூட்டுத்தாபனத்தின் உரிமையானது நிலை நாட்டப்படும் போது அங்கீகரிக்கப்படுகின்றது.

(ஊ) பிற வருமானம்

பிற வருமானம் சேர்தல் அடிப்படையொன்றில் அங்கீகரிக்கப் படுகின்றது.

01.2.3.2 செலவின அங்கீகாரம்

வருமானக்கூற்றில் செலவுகள் உறப்பட்ட செலவுக்கும் குறித்த வருமான விடயங்களின் சம்பாத்தியத்திற்குமிடையே உள்ள நேரடி தொடர்பு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன. வினைத் திறமையான நிலைமையில் வியாபாரத்தை நடாத்துவதிலும் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களைப் பேணுவதிலும் உறப்படும் சகல செலவினங்களும் வருமானக் கூற்றுக்கு சாட்டுதல் செய்யப்படுகின்றன. வருமானக் கூற்றை முன்வைக்கும் நோக்கத்திற்கான “செலவுகளின் பணி” முறை அது இக்கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையின் அமிசங்களை நியாயமான அடிப்படையொன்றில் வழங்குவதில் பின்பற்றப்படுகின்றது.

01.2.3.2.1 நிதிச் செலவுகள்

நிதிச்செலவுகள் வருமானக்கூற்றின் அங்கீகரிக்கப்படும் நிதிச் சொத்துக்கள் (வியாபார பெறத்தக்கவைகள் தவிர்ந்த) மீது அங்கீகரிக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டம், சேத நட்டங்கள் மூலமாக நியாயமான பெறுமதியின் நிதிச் சொத்துக்கள் மீதான நியாமான பெறுமதி நட்டங்கள் மற்றும் விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதிச் சொத்துக்களின் தீர்வு செய்தல் மீதான நட்டங்கள் மற்றும் கடன்படல்கள், ஏற்பாடுகள் மீதான முடிவுறாத கழிவு மற்றும் நட்டங்கள் ஆகியவற்றின் மீதான வட்டிச் செலவுகளை உள்ளடக்கியுள்ளன.

கொள்ளலுக்கு நேரடியாக சாட்டப்படத்தக்க கடன்படல் செலவுகள் பயன்படுத்தலுக்கு அல்லது விற்பனைக்கு கருதப்பட்ட நோக்கத்திற்கு தயார்படுத்திக் கொள்வதற்கு கணிசமான காலப்பகுதியை தேவைப்படுத்துகின்ற சொத்தொன்றின் கொள்ளலுக்கும் நிரு மாணத்திற்கும் அல்லது உற்பத்திக்கும் அந்தந்தச் சொத்துக்களின் செலவின் ஒரு பகுதியாக மூலதனப்படுத்தப்படுகின்றன. ஏனைய சகல கடன்படல் செலவுகளும் அவை ஏற்படும் காலப்பகுதியில் செலவழிக்கப்படுகின்றன. கடன்படல் செலவுகள் நிதியங்களின் கடன்படலுடன் தொடர்பில் இத்தொகுதியானது செலவழிக்கின்ற பிற செலவு-களையும் வட்டியையும் கொண்டுள்ளன.

01.2.4 வெளியிடப்பட்டுள்ளனவும் ஆனால் இன்னும் செயற்பாட்டுக்கு வராதவையுமான இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

வெளியடப்பட்டுள்ளவைகளும் ஆனால் இக்கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் வெளியிடப்படும் திகதி வரை செயற்பாட்டுக்கு வராதவைகளுமான நியமங்கள் கீழே நிரற்படுத்தப்பட்டுள்ளன. வெளியிடப்பட்டுள்ள இந்த நியமங்கள் மற்றும் பொருள்கோடல்களின் நிரற்படுத்தல் எதிர்காலத் திகதியொன்றில் ஏற்புடையதாகுமென இக்கூட்டுத்தாபனம் நியாயமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது. இக்கூட்டுத்தாபனம் அந்த நியமங்கள் செயற்பாட்டிற்கு வந்தபின் அவற்றை மேற்கொள்வதற்கு கருதுகின்றது.

(அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் 9 - நிதிச் சாதனங்கள வெளியிடப்பட்டுள்ள இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் 9 இன் வகைப்படுத்தலும் அளவீடும் வெளியிடப்பட்டதன் பிரகாரம் 39 ஆம் இலங்கை கணக்கீட்டு நியமத்தை பதிலீடு செய்து 39 ஆம் இலங்கை கணக்கீட்டு நியமங்களில் வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம் நிதிச் சொத்துக்களினதும் நிதிப் பொறுப்புக்களினதும் வகைப்படுத்தலுக்கும் அளவீட்டிற்கும் ஏற்புடைத்தானதாகும். இந்த நியமமம் 2015 சனவரி 01 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் வருடாந்த காலப் பகுதிகளில் செயல்வலுவுக்கு வரும். இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 இன் மேற்கொள்ளுகை இக்கூட்டுத்தாபனத்தின் நி-திச் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டின் மீது தாக்க மொன்றைக் கொண்டிருக்கும். ஆனால் இது நிதிப்பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீடுகள் மீது தாக்கம் எதையும் கொண்டிருக்கமாட்டாது. இந்த நியமம் 2015 சனவரி 01 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் வருடாந்த காலப்பகுதிகளுக்கு செயல்வலுவுக்கு வரும்.

(ஆ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 - நியாயப்பெறுமதி அளவீடு இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 சகல நியாயப்பெறுமதி அளவீடுகளுக்கும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் கீழ் வழிகாட்டலுக்கான தனியொரு நியமமாக தன்னை நிலைநாட்டிக் கொண்டுள்ளது. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 நிறுவனமொன்று நியாயப் பெறுமதியை பயன்படுத்துமாறு எப்போது தேவைப்படுத்தும் என்பதைப் பற்றி குறிப்பிடவில்லை என்பதுடன் அது நியாயப் பெறுமதியா-னது தேவைப்படும் போது அல்லது அனுமதிக்கப்படும் போது இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் கீழ் நியாயப் பெறுமதியை எவ்வண்ணம் பயன்படுத்தலாம் என்பதற்கான வழிகாட்டலை வழங்குகின்றது. இக்கூட்டுத்தாபனமானது இந்த நியமமானது நிதி நிலைமையின் மீதும் செயலாற்றுகை மீதும் கொண்டிருக்கும் தாக்கத்தைப் பற்றி தற்போது மதிப்பிட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த நிய-மமானது 2014 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலப்பகுதிகளுக்கு செயல்வலுவுக்கு வரும்.

ஏற்புடைத்தாக்கப்பட்ட விலக்கழித்தல்கள்

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 1 இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் மேற்கொள்ளுகையானது முதற்தடவையாக அதைப் பின்பற்றுவோர்களுக்கு சில விலக்களிப்புக்களை வழங்குகின்றது. அந்த விலக்களிப்புகக்கள் விருப்புரிமைத் தேர்வுக்குரியவைகளாகும் என்பதுடன் சில விலக்களிப்புக்கள் சில இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் ∴ இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பின்னோக்கிய பிரயோகத்திற்கும் கட்டாயமானவைகளாகும். இக்கூட்டுத்தாபனத்தின் விருப்புரிமை விலக்களிப்புக்கள் பிரயோகிப்பதற்கு விருப்
புரிமையை பின்பற்றுகின்றன.

## 2. ஆதனங்களும் பொறித்தொகுதியும் உபகரணங்களும்

## (அ) இறையிலி சொத்துக்கள

| | காணியும் கட்டடங்களும் | போறித்தொகுதியும் பொறிக் கோப்பும் | கணனி மென்∴ வன் | தளபாடங்களும் பொருத்திகளும் | அலுவலக உபகரணங்கள் | மோட்டார் வாகனங்கள் | மொத்தம் (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 சனவரி 01 ஆம் திகதியில் இருந்தவாறான மீதி | 103,381,959 | 646,369,280 | 50,293,110 | 29,943,448 | 42,713,710 | 87,247,247 | 959,948,755 |
| இக்காலப் பகுதியில் சேர்க்கைகள் | 13,700,330 | 12,680,843 | 6,404,800 | 2,949,225 | 4,786,645 | - | 40,521,843 |
| மதிப்பிறக்கம் | (52,136,400) | (559,661,962) | - | - | - | (85,900,278.58) | (697,698,640) |
| மீள் மதிப்பீட | 7,247,541,318 | 264,459,104 | - | - | - | 212,590,831 | 7,724,591,253 |
| தீர்வுகள்.∴மாற் றங்கள் | (33,256,007) | - | - | - | - | - | (33,256,007) |
| 2012 திசெம்பர் 31 இல் ஆம் திகதியில் இருந்தவாறான மீதி | 7,279,231,200 | 363,847,265 | 56,697,910 | 32,892,672 | 47,500,355 | 213,937,800 | 7,994,107,203 |

| கழிக்குக தேய்மானம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 சனவரி 01 ஆம் திகதியில் இருந்த வாறான மீதி | 49,831,762 | 513,527,431 | 31,542,661 | 15,880,824 | 29,194,523 | 85,148,486 | 725,125,687 |
| குறைந்த வீடமைப்பு சொத்துகளிலிருந்து மாற்றப் பட்டவை | - | - | - | - | - | - | - |
| ஆண்டுக் கான கட்டணம் | 2,304,638 | 46,134,531 | 6,547,294 | 1,850,349 | 4,405,698 | 751,793 | 61,994,303 |
| தீர்வின் மீதான மதிப்பிறக்கம் | - | - | - | - | - | - | - |
| மீள் மதிப்பீடு | (52,136,400) | (559,661,962) | | | | (85,900,279) | (697,698,640) |
| 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் இருந்த வாறான மீதி | - | - | 38,089,955 | 17,731,174 | 33,600,221 | - | 89,421,350 |

| கொண்டு செல்லல் தொகை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 திசெம்பர் 31 01 இல் இருந்த வாறான மீதி | 7,279,231,200 | 363,847,265 | 18,607,955 | 15,161,499 | 13,900,134 | 213,937,800 | 7,904,685,853 |
| 2011 திசெம்பர் 31 இல் இருந்த வாறான மீதி | 53,550,197 | 132,841,849 | 18,750,449 | 14,062,623 | 13,519,187 | 2,098,762 | 234,823,068 |

| (ஆ) குத்தகைக்குடெ | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 திசெம்பர் இல் இருந்த வாறான மீதி | - | 8,400,000 | - | - | - | 13,992,286 | 22,392,286 |
| இக்காலப் பகுதியில் சேர்க்கைகள் | - | - | - | - | - | - | - |
| மதிப் பிறக்கம் | - | (4,087,231) | - | - | - | - | (4,087,231) |
| இறையிலி சொத்துக்கு மாற்றப் பட்டது | - | - | - | - | - | - | - |
| மீள் மதிப் பிடல்கள் | - | 4,087,231 | - | - | - | - | 4,087,231 |
| 2012 திசெம்பர் 31 இல் இருந்த வாறான மீதி | - | 8,400,000 | - | - | - | 13,992,286 | 22,392,286 |

| கழிக்குக மதிப்பிறக்கம | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 சனவரி 01 ஆம் திகத-ியில் இருந்த வாறான மீதி | - | 2,407,233 | - | - | - | 4,236,504 | 6,643,737 |
| குறைந்த வீடமைப்பு சொத்துகளிலிருந்து மாற்றப் பட்டவை | - | - | - | - | - | - | - |
| ஆண்டுக் கான கட்டணம் | - | 1,679,998 | - | - | - | 2,798,457 | 4,478,455 |
| தீர்வின் மீதான மதிப்பிறக்கம் | - | - | - | - | - | - | - |
| மீள் மதிப்பீடு | - | (4,087,231) | - | - | - | - | (4,087231) |
| 2012 திசெம்பர் 31 ஆம் திகத-ியில் இருந்த வாறான மீத | - | - | - | - | - | 7,034,961 | 7,034,961 |

| கொண்டு செல்லல் தொகை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 டிசம்பர் 31 இல் இருந்த வாறான மீதி | - | 8,400,000 | - | - | - | 6,957,325 | 15,357,325 |
| 2011 டிசம்பர் 31 இல் இல் இருந்த வாறான மீதி | - | 5,992,767 | - | - | - | 9,755,782 | 15,748,549 |

| மொத்த கொண்டு செல்லப்படும் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 டிசம்பர் 31 இல் இல் இருந்த வாறான மீதி | 7,279,231,200 | 372,247,265 | 18,607,955 | 15,161,499 | 13,900,134 | 220,895,125 | 7,920,043,178 |
| | | | | | | | |
| 2012 டிசம்பர் 31 இல் இல் இருந்த வாறான மீதி | 7,279,231,200 | 372,247,265 | 18,607,955 | 15,161,499 | 13,900,134 | 220,895,125 | 7,920,043,178 |
| | | | | | | | |
| 2011 டிசம்பர் 31 இல் இல் இருந்த வாறான மீதி | 53,550,197 | 138,834,617 | 18,750,449 | 14,062,623 | 13,519,187 | 11,854,543 | 250,571,617 |

## 03. 31 ஆம் திகதியில் இருந்த வாறான பங்குகளில் உள்ள முதலீடுகள்

| மொத்த கொண்டு செல்லப்படும் தொகை | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 2012 | | 2011 | |
| | பங்குகளின் எண்ணிக்கை 12,000,000 | செலவு | நியாயமான பெறுமதி | செலவு | நியாயமான பெறுமதி |
| HDFC | 12,000 | 1,200,000 | 607,200 | 1,200,000 | 16,800,000 |
| | | 1,200,000 | 607,200 | 1,200,000 | 16,800,000 |

## 04. கையிருப்பு

| பொருட்கள் | 2012 ரூபா | 2011 ரூபா |
|---|---|---|
| பொருட்கள் | 294,675,541 | 366,936,223 |
| சேய்து முடிக்கப்பட்ட பொருட்கள் | 205,513,308 | 176,854,014 |
| நுடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை | 2,914,341 | - |
| | 503,103,190 | 543,790,237 |
| கழிக்குக: முந்த நகர்வுடைய பொருட்களுக்கும் வழக்கொழுந்த பொருட்களுக்குமான ஏற்பாடுகள் | 38,245,115 | 29,317,639 |
| கூட்டுக: E&M கையிருப்பு | 67,944,041 | 86,474,279 |
| | **532,802,115** | **600,946,877** |

## 05.வியாபார மற்றும் பிற பெறத் தக்கவைகள்

| | | |
|---|---|---|
| வியாபார பெறத் தக்கவைகள் (குறிப்பு 5.1) | 4,707,337,873 | 3,667,173,351 |
| ஒப்பந்த பிடித்து வைத்திருத்தல் பணத்தொகை | 1,265,611,589 | 919,128,103 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | 109,079,797 | 103,399,321 |
| | 6,082,029,258 | 4,689,700,775 |
| 5.1 வியாபார கடன் பெறுநர்கள் | **5,720,868,660** | **4,657,374,315** |
| கழிக்குக: | | |
| பொசேவ/பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 819,184,201 | 727,190,753 |
| N S L | - | 3,541,485 |
| அறவிட முடியா கடன்களுக்கும் சந்தேக கடன்களுக்குமான ஏற்பாடு | 340,272,384 | 316,137,597 |
| | 1,159,456,585 | 1,046,869,835 |
| கடன் பட்டோர் உபகரண மற்றும் இயந்திரவியல் | 145,925,798 | 56,668,871 |
| | **4,707,337,873** | **3,667,173,351** |
| 5.2 பிடித்து வைத்திருத்தல் மற்றும் மொத்தச் செலவு | | |
| நிர்மாண தொகுதி | 812,138,466 | 584,038,143 |
| பொறிமுறை மற்றும் மின் தொகும் | 60,533,395 | 51,952,024 |
| நிருமாண ஆக்கக் கூறுகள் தொகுதி | 111,115,856 | 240,053,335 |
| ஆலோசனைத் தொகுதி | 32,220,601 | 32,220,601 |
| விசேட தொழிற்பாடுகள் பிரிவு | 233,125,770 | 10,864,000 |
| சேவைத் தொகுதி | 52,390 | - |
| E & M | 16,425,111 | - |
| | **1,265,611,589** | **919,128,103** |

| | | |
|---|---|---|
| 5.3 பிற பெறத் தக்கவைகள் | | |
| உப ஒப்பந்தங்களிலிருந்து பெறத்தக்கவைகள் | 86,383,642 | 86,383,642 |
| மேம்பாலத்திலிருந்து பெறத்தக்க வருமானம் | 538,482 | 440,931 |
| சேருவாவில அமைவிடத்தில் காசு இழப்பு (மீளப் பெறத்தக்கது) | 805,938 | 805,938 |
| வங்கி வைப்புக்கள்மீதான வட்டி | 1,558,083 | 2,813,210 |
| 1576 ஆம் இலக்க அமைவிடத்திலிருந்து பெறத்தக்கவை - (நகர அபிவிருத்தி அதிகாரசபை) | 5,356,353 | 5,356,353 |
| இடர்ப்பாட்டுக் கடன்கள் | 14,437,299 | 7,599,247 |
| | **109,079,797** | **103,399,321** |

## 06. ஏனைய நடைமுறைச் சொத்துகள்

| | | |
|---|---|---|
| 6.1 வாடிக்கையாளர்களிடமிருந்து வருமதிகள் | **1,585,807,328** | **844,539,910** |
| 6.2 அறவிடத்தக்க வைப்புக்கள் | **23,251,037** | **22,254,740** |
| 6.3 நடைமுறைச் சொத்துக்கள் | | |
| வெளிநாட்டுக் கொள்வனவு கட்டுப்பாட்டுக் கணக்கு | 66,291,789 | 13,734,094 |
| சம்பளங்கள், கூலிகளின் முழுமையாக்கல் அறவீடுகள் | 21,138 | |
| பிடித்து வைத்திருத்தல் வரி | 56,728,900 | 71,208,053 |
| முற்கொடுப்பனவுகள் | 14,526,453 | 5,226,841 |
| வட்டி வருமானம் மீதான பிடிமான வரி | 6,478,966 | 6,417,251 |
| தேசத்தைக் கட்டியெழுப்பல் வரி | 13,567,605 | 13,567,215 |
| நிதியங்களின் மாற்றம் | 11,000,000 | 5,745,250 |
| பணியாளர்களிடமிருந்து பெறத்தக்கவைகள் | - | 20,410 |
| மீளப் பெறத்தக்க பொருளாதாரச் சேவை வரி | 2,873,910 | 15,086,838 |
| அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் குறைந்த வருமான கட்டிடத்திலான முதலீடு (காலாண்டு) | 5,958,715 | - |
| குறைந்த வருமான எல்லைக் கணக்கு | 53,917 | 5,917 |
| இடைத்தொகுதி நடைமுறைக் கணக்கு(கடன் பெறுநர்கள்) | (55,975,382) | - |
| NEMO வுக்கான கடன் | - | 13,770,288 |
| மருத்துவ இன்சூரன்ஸ் | (242,183) | 9,169 |
| நலனோம்பல் முற்பணம் | 500,000 | 500,000 |
| E & M வைப்பும் முற்பணமும் | 9,793,608 | 15,747,813 |
| WIP E&M கருத்திட்டம் | - | 6,413,514 |
| | **131,577,435** | **167,452,653** |

| | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|
| 6.4. முற்பணங்கள் | | |
| கூலிகள் முற்பணம் | 61,730 | 61,730 |
| வழங்குபவர்களுக்கான முற்பணக் கொடுப்பன வுகள் | 21,702,334 | 14,666,769 |
| சேவைகளுக்கான முற்பணங்கள் | 8,412,996 | 6,716,091 |
| சம்பள முற்பணங்கள் | 1,934,248 | - |
| பதவியினர்களுக்கான முற்பணங்கள் | 20,410 | 606,340 |
| பணியாளர்களுக்கான விழா முற்பணங்கள் | 2,302,394 | 2,122,194 |
| கட்டளை முற்பணங்களுடன் காசோலை | 745,091,798 | 423,598,569 |
| விசேட காசு முற்பணங்கள் / பிரயாண முற்பணங்கள் | (396,170) | 9,904,849 |
| பள்ளேகல முற்பணக் கணக்கு | 14,395 | 64,395 |
| உப ஒப்பந்தகாரர்களுக்கான திரட்டல் முற்பணத் தொகைகள் | 242,269,162 | 392,803,885 |
| விசே காசு முற்பணங்கள் (சப்பளங்களும் கூலிகளும்) | (290,495) | 122,705 |
| தொழிலாளர் உப ஒப்பந்த முற்பணங்கள் | 264,371,467 | 241,367,741 |
| | **1,285,494,268** | **1,092,035,268** |
| மொத்தம் | **3,026,130,069** | **2,126,282,571** |

07. ஏனைய நடைமுறை நிதிச் சொத்துக்கள

| | | |
|---|---|---|
| நிலையான தவரண வைப்புகள் நீண்ட காலப்பகுதி (இலங்கை வங்கி கூட்டுக் கிளை) | 11,185,354 | 10,379,219 |
| நிலையான வைப்புக்கள் கணக்கு (சாரதிகள் எஸ்கே காசும்) | 159,221 | 159,221 |
| முறிகள் மீதான (பிவி பார்க் வீதி) நிலையான வைப்புக்கள் (பாதுகாப்பு) | 270,000 | 270,000 |
| நிலையான வைப்புகள் - தொழிலாளர்கள் நட்டஈடு (பிவி பார்க் வீதி) | 208,750 | 343,250 |
| லோகா வங்கி நிலையான வைப்புகள | - | 3,483,910 |
| | **11,823,325** | **14,635,600** |

08 காசும் காசுக்குச் சமமானவைகளும

| | | |
|---|---|---|
| வங்கியில் உள்ள காசும் கைவசம் உள்ள காசும் | 66,132,650 | 122,027,650 |
| லோக வங்கி நடைமுறைக் கணக்கு | - | 2,474,805 |
| வங்கியில் உள்ள நிலையான வைப்புக்கள் - குறுந்தவணைக் காலம் | 137,310,817 | 130,555,918 |
| வங்கியில் உள்ள சேமிப்பு | 4,896,894 | 900,000 |
| வங்கியில் உள்ள நெமோ காசு | 1,260,113 | 14,907,256 |
| கொள்வனவு காசு / உதிரிப்பாகங்கள், கட்டுநிதி மற்றும் பிரயாண கட்டுநிதி | 2,297,125 | 570,191 |
| கூலிகள் துண்டு வீதி கட்டுநிதி | 333,985 | 215,140 |
| | **212,231,584** | **271,650,960** |

09. வட்டியுடைய கடன்கள் குத்தகைப் பொறுப்பின் தற்போதைய நிலை

| | ஒரு வருடத்திற்குள் கொடுபடத் தக்கவை ரூபா | ஒரு வருடத்திற்குப் பின்னர் கொடுபடத் தக்கவை சுஎ. | மொத்தம. |
|---|---|---|---|
| பொறித்தொகுதியும் பொறிக் கோப்பும் | 2,966,964 | 1,727,963 | 4,694,927 |
| மோட்டார் கார் | 4,885,848 | 1,056,178 | 5,942,026 |
| பிற்போடப்பட்ட வட்டி | **7,852,812** | **2,784,141** | **10,636,953** |
| பொறித்தொகுதியும் பொறிக் கோப்பும் | 540,037 | 99,937 | 639,975 |
| மோட்டார் கார் | 620,586 | 40,347 | 660,933 |
| | **1,160,623** | **140,285** | **1,300,908** |
| | **6,692,189** | **2,643,857** | **9,336,046** |

## 10. இளைப்பாறல் நலன் கடப்பாடு

| | **2012** ரூபா | **2011** ரூபா |
|---|---|---|
| ஆண்டின் தொடக்கத்தில் இருந்தவாறான | 156,905,063 | 145,352,476 |
| நடைமுறைச் சேவைச் செலவு | 14,518,055 | 11,665,352 |
| ஆண்டிற்கான வட்டி வீதிப்பு | 18,828,604 | 17,442,327 |
| ஊகத்தில் உள்ள மாற்றங்களிலிருந்து எழும் (இலாபம்.ׄ.நட்டம்) | 29,408,101 | (902,456) |
| இவ்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட பணிக்கொடை | (14,360,673) | (16,652,636) |
| | **205,299,150** | **156,905,063** |
| 10-1 வரவிலக்கணப்படுத்தப்பட்ட நலன்கடப்பாட்டின் மீதான செலவுகள் | | |
| நடைமுறைச் சேவைச் செலவு | 14,518,055 | 11,665,352 |
| வட்டிச் செலவு | 18,828,604 | 17,442,327 |
| ஊகங்களிலான மாற்றங்களிலிருந்து எழும் (இலாபம்) / நட்டம் | 29,408,101 | (902,456) |
| | **62,754,760** | **28,205,223** |

வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நலன்கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியின் கணக்கிடுவதற்குத் தேவைப்படும் ஊகங்களை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு பணிக்கொடைச் சூத்திரத்தை பயன்படுத்தி பணிக்கொடைப் பொறுப்பு மதிப்பிடப்படுகின்றது.

ஊகங்கள்

பின்வருவன அறிக்கையிடல் திகதியில் இருந்தவாறான பிரதான ஊகங்கள் ஆகும்.

| | 2012 | 2011 |
|---|---|---|
| கழிவு விகிதம் | 12% | 12% |
| எதிர்கால சம்பள உயர்வு விகிதம் | 0-2% | 0-2% |

## 11. வியாபார செலுத்துமதிகள்

| | 2012 | 2011 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| வியாபார செலுத்துமதிகள் | 1,555,880,876 | 1,193,502,684 |
| கொடுபடத்தக்க திரட்டல் முற்பணத் தொகைகள் | 3,172,939,909 | 2,908,074,696 |
| நடமாடும் முற்பண செலுத்துமதிகள்<br>நானவித கடன்கொடுத்தோர் செலுத்தவேண்டியவை அடங்கலாக | 128,266,236 | 122,369,381 |
| திறைசேரிக் கடன் வட்டி | 4,006,293 | 4,006,293 |
| | - | 114,219 |
| | **4,861,093,314** | **4,228,067,273** |
| 11.1 வியாபார செலுத்துமதிகள் | | |
| வியாபார கடன் கொடுத்தோர் | **198,823,283** | **122,759,010** |
| உப ஒப்பந்த காரர்கள் | | |
| உப ஒப்பந்தங்கள் | 520,353,787 | 396,260,111 |
| உப ஒப்பந்தம் பிடித்து வைத்திருத்தல் | 502,158,891 | 317,662,560 |
| உப ஒப்பந்தம் சேர்ந்தவைகள் | 9,614,881 | 9,614,881 |
| | **1,032,127,559** | **723,537,552** |
| நகர அபிவிருத்தி அதிகார சபை | | |
| நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டுக் கணக்கு | 20,557,709 | 22,512,074 |
| அமைச்சின் தொகுதி வாகனங்கள | 36,669,366 | 45,572,561 |
| கடன்தருநர்கள் மின்சார பொறியியலும் பொறிமுறைப் பொறியியலும் | 267,702,959 | 279,121,487 |
| மொத்தம் | **1,555,880,876** | **1,193,502,684** |
| 11.2 சேர்ந்த செலவுகளையும் உள்ளடக்கி சில்லறைக் கடன் தருநர்கள் | | |
| சொத்துக்களின் கொள்ளல் - கட்டடப் பொருட்கள், பொறிமுறைக் கூட்டுத்தாபனம் | 1,741,893 | 1,741,893 |
| மூன்றாவது தரப்பு கொடுப்பனவு | (14,949,144) | 117,302 |
| சேவைகள் | 6,041,106 | 3,802,483 |
| பணியாளர்கள் ஏற்பாட்டு சகாய நிதியம் | (5,587,683) | 8,859,931 |
| பணியாளர்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 866,599 | 1,208,170 |
| பணியாளர்கள் சகாய நிதிய நிலுவைகளின் கொடுப்பனவு - 1984 ஆம் ஆண்டிற்கு முன்னர | 6,908,372 | 7,209,265 |

| | | |
|---|---|---|
| சம்பளங்கள் | 11,139,599 | 753,117 |
| மேலதிக நேரச் சம்பளம் | 41,265,840 | 19,072,350 |
| கூலிகள் | 837,959 | 506,780 |
| கொடுபடத்தக்க பயிலுனர் படிகள் | 1,790,506 | 2,611,210 |
| சேர்ந்த செலவினம்- மின்சாரமும் பொறிமுறையும் | 74,596,985 | 67,295,873 |
| கொடுபடத் தக்க நட்டஈடு - மின்சாரமும் பொறிமுறையும் | 248,043 | 248,042 |
| நன்கொடை | (1,245,225) | - |
| முத்திரைக் கட்டணங்கள் | 465,165 | 196,240 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 4,146,219 | 8,746,725 |

12 பிறநடைமுறைப் பொறுப்புக்கள

| | | |
|---|---|---|
| கொடுபடத் தக்க பிற வரிகள் | 233,531,217 | 241,190,899 |
| வாடிக்கையாளர்களுக்கு வருமதியானவை | 2,048,345,092 | 1,383,039,997 |
| கொடுபடத்தக்க வற் | | |
| பணியாளர்கள் சகாய நிதியத்தின் மிகைக் கட்டணத்திற்கான ஏற்பாடு | | |
| பிற பொறுப்புக்கள் | 1,232,620,916 | 1,032,318,118 |
| | **3,514,497,225** | **2,656,549,014** |
| | **8,375,590,539** | **6,884,616,287** |
| 12.1 கொடுபடத்தக்க பிற வரிகள் | | |
| உழைக்கும்போதே செலுத்தல் வரி | 750,974 | 205,567 |
| மொத்த சேவை வரி/ பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 146,473,957 | 129,593,321 |
| தேசிய பாதுகாப்பு வரி | 500,542 | 500,542 |
| தேகவ | 2,454,880 | 4,278,730 |
| செலுத்தத் தவறிய நிலையில் உள்ள வரி | 3,739,236 | 3,739,236 |
| வரி | 30,762,860 | 9,500,000 |
| சிசேக க்கான ஏற்பாடு | 19,903,480 | 23,786,391 |
| வருமான வரிக்கான ஏற்பாடு | 28,945,287 | 69,587,112 |
| | **233,531,217** | **241,190,899** |
| 12.2 | | |
| பதவியினர்களுக்கான இறுதிக் கொடுப்பனவுகள் | (3,190,313) | 236,635 |
| உரிமை கோரப்படாத கூலிகளும் அமய மேலதிக நேரச் சம்பளங்களும் | 767,727 | 740,113 |
| உரிமை கோரப்படாத சம்பளங்களும் மேலதிக நேரச் சம்பளங்களும் | 3,553,205 | 3,050,760 |
| உரிமை கோரப்படாத கார் மைல்கூலியும் உதவிப்படியும் | 6,899 | 3,436 |
| கேள்வி வைப்புக்கள் | 4,833,407 | 1,555,139 |
| பிணைய வைப்புக்கள் | 846,500 | 859,500 |
| அறவீடுகளை முழுமையாக்கி சம்பளங்களும் கூலிகளும் | 64,633 | 46,754 |
| பிற வைப்புக்கள் | (2,212,200) | 55,000 |
| வீதி அபிவிருத்தி நிறுவகத்திற்கான கொடுபடத் தக்கவைகள் | 1,113,114 | 1,289,114 |
| கட்டடத் திணைக்களம் | 549,640 | 549,640 |
| தலதா மாளிகை கட்டுப்பாட்டுக் கணக்கு | 993,816 | 993,816 |
| பௌத்த சாசன அமைச்சின் கட்டுப்பாட்டுக் கணக்கு | 6,472,546 | 6,472,546 |
| கணக்கு கொடுப்பனவு மீதான கடன் பெறுநர்கள் | 288,517,127 | 269,748,802 |
| தொண்டர் இளைப்பாறல் திட்டம் - (திறைசேரி) | 20,278,812 | 20,278,812 |
| இரத்து செய்தல் காசோலைக் கணக்கு | 74,860 | 74,860 |
| செலவுப்பட்டியல் கழிவுக் கணக்கு | 50,000,000 | - |

| | | |
|---|---|---|
| வைப்பு மின்சாரம் மற்றும் பொறிமுறை | - | 2,138,553 |
| நிர்மாணத் தொகுதி | 240,045,789 | 217,907,421 |
| பொறிமுறை மற்றும் மின்சாரத் தொகுதி | 3,356,331 | 3,033,914 |
| நிருமாண ஆக்கக் கூறுகள் தொகுதி | 293,217,712 | 299,598,770 |
| உசாத்துணைத் தொகுதி | 125,459,819 | 129,324,191 |
| விசேட தொழிற்பாட்டுப் பிரிவு | 131,518,729 | 11,989,248 |
| வரவு செலவுத் திட்டப் படிக்கான ஏற்பாடு | 9,164,161 | 9,556,413 |
| மருத்துவ லீவு சன்மானத்திற்கான ஏற்பாடு | 3,484,772 | 3,619,136 |
| பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணக் கருத்திட்டங்களுக்கான ஏற்பாடு (பொது) | 1,916,238 | 1,916,238 |
| தொழிலாளர் உப ஒப்பந்த முற்பணங்களுக்கான ஏற்பாடு | 51,787,592 | 47,279,307 |

13. வங்கி மேலதிகப் பற்று

| | | |
|---|---|---|
| மக்கள் வங்கி | 480,197,432 | 136,804,575 |
| இலங்கை வங்கி | 115,105,694 | 1,111,212 |
| | **595,303,126** | **137,915,787** |

14. தொடர்புடைய தரப்பினர்கள் வெளிப்படுத்தல்கள்

இக்கம்பனியானது சாதாரண தொழிற்போக்கில் பின்வரும் தொடர்புடைய தரப்புடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்துள்ளது.

14.1 முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்களின் நட்டஈடு

24 ஆம் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் “தொடர்புடைய தரப்பு வெளிப்படுத்தல்கள்”எனப்படும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்கள் எனப்படுவோர் இந்த நிறுவனத்தின் திட்டமிடல், பணிப்பு விடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான அதிகாரத்தையும் பொறுப்பையும் கொண்டவர்களாவர். இதற்கமைவாக பணிப்பாளர்கள் சபை “நிறைவேற்று பணிப்பாளர்களையும் நிறைவேற்றுநர்கள் அல்லாத பணிப்பாளர்களையும் உள்ளடக்கி” பிரதேச பொது முகாமையாளர் என்ற பதவிப் பெயரையும் மேற்குறித்த பதவிநிலைகளையும் வகிப்பவர்களும் இக்கம்பனியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்களாக வகைப்படுத்தப்பட்ட அவர்களுடைய நெருக்கமான குடும்ப உறுப்பினர்களையும் இந்த ஆளணி கொண்டுள்ளது.

| | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|
| குறுந்தவணைக்கால வேலைவாய்ப்பு நலன்கள் பணிப்பாளர்களின் ஊதியம் | 2,050,171 | 1,610,191 |
| அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தனது கொள்ளவுக்கு உட்பட்ட வரையறைக்குள்ளே ஓஷன் வியூ டெவெலப்மென்ற் கம்பனியுடன் செய்யப்பட்ட பரிமாற்றங்கள் இடம்பெற்றன. | 3,741,375 | 1,511,500 |
| | **5,791,546** | **3,121,691** |

14.2 அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவுக்குப் பின்னர் ஏற்பட்ட நிகழ்வுகள்

நிதிக்கூற்றுகளுக்கு சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல் செய்யப்படும் தேவையை ஏற்படுத்தும் பொருண்மையான நிகழ்வுகள் எதுவும் அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவுக்குப் பின்னர் ஏற்படவில்லை.

## 15. எதிர்பாராப் பொறுப்புக்கள்

2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் எதிர்பாராப் பொறுப்புக்கள் எதுவும் இருக்கவில்லை.

## 16. இலங்கை நிதி ஒழுங்கு விதிகளின் / இலங்கை கணக்கீட்டு நியமத்தின் முதற்தடவையான மேற்கொள்ளப்படுகை

16.1 2011 ஏப்ரல் 01 ஆம் திகதியில் இருந்தவாறான சமபங்கின் கணக்கிணக்கம் (இலங்கை நிதி ஒழுங்கு விதி நியமங்களுக்கு / இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு செய்யப்பட்ட இடைப்போக்குமாற்றத் திகதி

| | 2011 சனவரி 01 ஆம் திகதியில் இருந்தவாறான | | | 2011 திசெம்பர் 31 ஆம் திகதியில் இருந்தவாறான | | |
|---|---|---|---|---|---|---|
| | இலங்கை கணக் கீட்டு நியமங்களின்படி ரூபா | மீள் அளவ-ீடு / மீள் வகைக்படுத்தல ரூபா | இலங்கை நிதி ஒழுங்கு விதிகள் நியமங்களின்படடி / இலங்கை ணக்கீட்டு நியமங்களின்படி ரூபா | இலங்கை ணக்கீட்டு நியமங்களின்படி ரூபா | மீள் அளீவீடு / மீள் வகைப்படுத்தல் ரூபா | லங்கை நிதி ஒழுங்கு விதிகள் நியமங்களின்படி / இலங்கை ணக்கீட்டு நியமங்களின்படி ரூபா |
| சொத்துக்கள் | | | | | | |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | | | | | | |
| ஆதனங்களும் பொறித்தொகுதியும் உபகரணங்களும் | 155,549,743 | - | 155,549,743 | 250,571,616 | - | 250,571,616 |
| பங்குகளில் முதலீடுகள் | 1,200,000 | 5,400,000 | 6,600,000 | 1,200,000 | (592,800) | 607,200.00 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலை | 6,038,110 | - | 6,038,110 | 7,891,609 | - | 7,891,609 |
| | **162,787,853** | **5,400,000** | **168,187,853** | **259,663,225** | **(592,800)** | **259,070,425** |
| பிற்போடப்பட்ட வரி | **-** | **1,946,182** | **1,946,182** | **37,026,852** | | **37,026,852** |
| நடைமுறைச் சொத்து | - | | | - | | - |
| கையிருப்பு | 401,616,002 | - | 401,616,002 | 600,946,877 | - | 600,946,877 |
| வியாபாரக் கடன் பெறுநர்கள் | 2,615,772,543 | (2,615,772,543) | - | 3,667,173,352 | (3,667,173,352) | - |
| பிடித்து வைத்திருத்தல் | 741,493,365 | (741,493,365) | - | 919,128,103 | (919,128,103) | - |
| பிற கடன் பெறுநர்கள் பெறத்தக்கவைகளும் முற்பணமும் | 892,647,826 | (892,647,826) | - | 1,362,887,241 | (1,362,887,241) | - |
| வியாபார பெறத்தக்கவைகளும் பிற பெறத்தக்கவைகளும் | - | 3,424,023,204 | 3,424,023,204 | | 4,689,700,775 | 4,689,700,775 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | - | 1,255,794,829 | 1,255,794,829 | | 2,126,282,571 | 2,126,282,571 |
| வைப்புக்கள் வருமதி | 10,994,916 | (10,994,916) | - | 22,254,740 | (22,254,740) | - |
| வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய வருமதிகள் | 418,909,383 | (418,909,383) | - | 844,539,910 | (844,539,910) | - |
| நிலையான வைப்புக்கள் | 21,120,084 | (21,120,084) | - | 14,635,600 | (14,635,600) | - |
| ஏனைய நடைமுறை நிதிச் சொத்துக்கள் | - | 21,120,084 | 21,120,084 | | 14,635,600 | 14,635,600 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 337,393,573 | - | 337,393,573 | 271,650,960 | - | 271,650,960 |
| | 5,439,947,692 | - | 5,439,947,692 | 7,703,216,783 | - | 7,703,216,783 |
| | - | | - | - | | - |
| மொத்தச் சொத்துக்கள் | 5,602,735,545 | 7,346,182 | 5,610,081,727 | 7,999,906,860 | (592,800) | 7,999,314,060 |
| | | | | | | - |
| சமபங்குகளும் பொறுப்புகளும் | | | | | | - |
| மூலதனமும் ஒதுக்கங்களும் | | | | | | - |
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | 70,000,000 | - | 70,000,000 | 70,000,000 | - | 70,000,000 |
| பொது ஒதுக்கங்கள் | 3,635,162 | - | 3,635,162 | 3,635,162 | - | 3,635,162 |
| மூலதன சேர்ந்த ஒதுக்கம் | 27,738,806 | | 27,738,806 | 27,738,806 | | 27,738,806 |
| சா இ மூலதனம் | - | - | - | (152,287,728) | - | (152,287,728) |
| விற்பனை ஒதுக்கங்களுக்கு தயாராக உள்ளவை | - | 5,400,000 | 5,400,000 | | (592,800) | (592,800) |
| திரண்ட இலாபம் / (நட்டங்கள்) | 487,515,618 | 1,946,182 | 489,461,800 | 825,496,824 | - | 825,496,824 |
| | **588,889,586** | **7,346,182** | **596,235,768** | **774,583,064** | **(592,800)** | **773,990,264** |
| மொத்த சம பங்குகள் | | | | | | |
| நடைமுறையல்லாத பொறுப்புகள் | | | | | | |
| நீண்டகால பெறுவனவுகள் | 30,800,000 | - | 30,800,000 | 30,800,000 | | 30,800,000 |
| பிற்போடப்பட்ட பொறுப்புக்கள் | 145,352,476 | - | 145,352,476 | 156,905,002 | | 156,905,002 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வட்டியுடனான கடன்படல்கள் | 12,656,078 | - | 12,656,078 | 9,472,634 | | 9,472,634 |
| | **188,808,554** | **-** | **188,808,554** | **197,177,636** | **-** | **197,177,636** |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | | | | - |
| திறைசேரிக் கடன் வட்டி | 4,006,293 | (4,006,293) | - | 4,006,293 | (4,006,293) | - |
| வியாபார கொடுபடத்தக்கவைகள் | - | 2,201,098,264 | 2,201,098,264 | | 4,228,067,273 | 4,228,067,273 |
| வட்டியுடனான கடன்படல்கள் | 5,029,495 | | 5,029,495 | 5,614,023 | | 5,614,023 |
| பிற நடைமுறைப் பொறுப்புக்கள் | - | 2,508,909,029 | 2,508,909,029 | | 2,656,549,015 | 2,656,549,015 |
| வியாபார கடன் பெறுநர்கள் | 683,431,614 | (683,431,614) | - | 1,193,502,694 | (1,193,502,694) | - |
| பிற கடன்பெறுநர்களும் கொடுபடத் தக்கவைகளும் | 1,266,931,542 | (1,266,931,542) | - | 1,395,992,608 | (1,395,992,608) | - |
| வாடிக்கையாளர்களுக்கு கொடுபட வேண்டிய வருமதிகள் | 1,293,651,840 | (1,293,651,840) | - | 1,383,039,997 | (1,383,039,997) | - |
| திரட்டல் முற்பணங்கள் | 1,461,986,005 | (1,461,986,005) | - | 2,908,074,696 | (2,908,074,696) | - |
| வங்கி மேலதிகப் பற்று | 110,000,614 | - | 110,000,614 | 137,915,787 | - | 137,915,787 |
| | 4,825,037,403 | - | 4,825,037,403 | 7,028,146,098 | | 7,028,146,098 |
| மொத்த சம பங்குகளும் பொறுப்புக்களும் | 5,602,735,545 | 7,346,182 | 5,610,081,727 | 7,999,906,860 | (592,800) | 7,999,314,060 |

## 16.2 கணக்கிணக்கங்களுக்கான குறிப்புகள

### 16.2.1 வியாரப் பெறத் தக்கவைகளும் பிற பெறத்தக்கவைகளும் / பிறநடை முறைச் சொத்துக்கள்

32 ஆம் 39 ஆம் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரயோகம் காரணமாக வியாபாரத்தில் உள்ள நிதியல்லாத சொத்துக்களும் (பிற வரிகளும் பெறத்தக்கவைகளும் வைப்புக்களும் முற்பணங்களும்) பிற பெறத்தக்கவைகளும் முறையே இடைப்போக்கு மாற்றத் திகதியிலும் 2011 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் 4,689,700,775 ரூபாவிற்கும் 2,126,282,571 ரூபாவுக்குமான பிற நடைமுறைச் சொத்துக்களுக்கு மீள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இக்கம்பனியானது தனிப்பட்ட திருத்த பரிசோததனை செய்தல் முறையின் கீழ் கடன்பெறுநருக்கான சேத ஏற்பாடுகள் இக்கம்பனியினால் வழங்கப்பட்டுள்ளன.

| வியாபார பெறத்தக்கவைகளும் பிற பெறத்தக்கவைகளும் | 2011<br>ரூபா | 2010<br>ரூபா |
|---|---|---|
| வியாபார கடன் பெறுநர்கள் | (3,667,173,352) | (2,615,772,543) |
| பிடிமானம் மற்றும் வியாபார கடன்பெறுநா் | (919,128,103) | (741,493,365) |
| ஏனைய கடனகட்டோா் வருமதிகளும் முற்பணங்களும் | (1,362,887,241) | (901,972,147) |
| வைப்பு வருமதிகள் | (22,254,740) | (10,994,916) |
| வாடிக்கையாளர்களிடமிருந்து வருமதிகள் | (844,539,910) | (418,909,383) |
| வகைப்படுத்தல் மாற்றம் | | |
| இலங்கை நிதி ஒழுங்கு விதிகள் நியமங்களின் பிரகாரம் வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 4,689,700,775 | 3,424,023,204 |
| ஐயக்கடன்களுக்கான ஒதுக்க முன் ஏற்பாடு | - | - |
| இலங்கை நிதி ஒழுங்கு விதிகள் நியமங்களின் பிரகாரம் ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 2,126,282,571 | 1,265,119,150 |
| தேறிய விளைவு | - | - |

### 16.2.2 வியாபார பெறத்தக்கவைகளும் பிற பெறத்தக்கவைகளும் பிற நடைமுறை நிதிச் சொத்துக்களும்

32 ஆம் 39 ஆம் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மொத்தமாக்கப்பட்ட வணிக பட்டியல் அடிப்படை மீது செலவின் அல்லது சந்தைப் பெறுமதியின் குறைந்த மட்டத்திலான குறுந்தவணை முதலீடுகளின்படி. இலங்கை நிதி ஒழுங்கு விதிகளின் நியமங்களின்/இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் இக்கம்பனி அத்தகைய முதலீடுகளை நியாயமான பெறுமதியில் அளவிடப்படும் இலாப, நட்ட முதலீடுகள் மூலமாக நியாயமான பெறுமதியென பெயர் இட்டுள்ளது.

16.2.3 இலங்கை நிதி ஒழுங்கு விதிகள் நியமங்களின் மேற்கொள்ளலின் தேறிய விளைபயனானது (பிடித்து வைத்திருத்தல் சம்பாத்தியங்கள்) மூலமாக 2011 சனவரி 01 ஆம் திகதியைக் கொண்ட இடைப்போக்கு மாற்றத் திகதியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

16.2.4 வியாபாரக் கொடுபடத் தக்கவைகள் / பிற நடைமுறைப் பொறுப்புக்கள்

32 ஆம் 39 ஆம் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரயோகம் காரணமாக வியாபாரப் பெறத்தக்கவைகளிலும் பிற பெறத்தக்கவைகளிலும் உள்ள நிதியல்லாத பொறுப்புக்கள் (பிற கொடுபடத் தக்க வரிகளும் ஏற்பாடுகளும்) பிற நடைமுறைப்பொறுப்புக்களாக மீள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேற்பட்ட திரட்டல் முற்பணங்கள் வியாபார பெறத்தக்கவைகளுக்கு மீள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| | **2011**<br>ரூபா | **2010**<br>ரூபா |
|---|---|---|
| திறைசேரி கடன் வட்டி | (4,006,293) | (4,006,293) |
| வியாபார கொடுபடத் தக்கவைகள் | | - |
| பிற நடைமுறைப் பொறுப்புக்கள் | | - |
| வியாபார கடன்பெறுநர்கள் | (1,193,502,694) | (683,431,614) |
| பிற கடன் பெறுநர்களும் கொடுபடத்தக்கவைகளும் | (1,395,992,608) | (1,266,931,542) |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வருமதிகள் | (1,383,039,997) | (1,293,651,840) |
| திரட்டல் முற்பணத் தொகைகள் | (2,908,074,696) | (1,461,986,005) |
| | | |
| வியாபார கொடுபடத் தக்கவைகள் | 4,228,067,273 | 2,201,098,264 |
| பிற நடைமுறைப் பொறுப்புக்கள் | 2,656,549,015 | 2,508,909,029 |
| | | |
| இலங்கை நிதி ஒழுங்கு விதிகள் நியமங்களின் பிரகாரம் ஏனைய நடைமுறை நிதிச் சொத்துக்கள் | - | - |

16.2.4 ஏனைய வருமானம் / நிதி வருமானம்

முன்னைய இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் வட்டி வருமானமும் பங்கு இலாப வருமானமும் பிற தொழிற்பாட்டு வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை நிதி ஒழுங்கு விதிகள் நியமங்களின் கீழ் / இலங்கை கணக்கீட்டு நியமங்களின் கீழ் வட்டி வருமானமும் பங்கு இலாப வருமானமும் நிதி வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| | 2011 திசெம்பர் 31 ஆஅம் திகத-ியில் முடிவடைந்த ஆண்டுக்கானது<br>ரூபா | 2010 சனவரி 01 ஆம் திகதியல் முடிவடைந்த ஆண்டிற்கானது<br>ரூபா |
|---|---|---|
| பிற தொழிற்பாட்டு வருமானத்திலிருந்து மீள் வகைப்படுத்தல் | (22,194,710) | (14,025,148) |
| நிதி வருமானத்தின் மீள் வகைப்படுத்தல் | 22,194,710 | 14,025,148 |

| | 2012 Rs. | 2011 Rs. |
|---|---|---|
| 19. ஏனைய வருமானம் | | |
| சுற்றுலா விடுதி அறைக் கட்டணங்கள் | 480,148 | 677,330 |
| வாடகை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் வீடு | 7,776,433 | 7,910,608 |
| கேள்விக் கட்டணங்கள் | 31,375 | 3,069,287 |
| துண்டுக்களின் விற்பனை | 14,894,975 | 60,480 |
| முகாமைத்துவக் கட்டணங்கள் | - | 10,200 |
| பங்கு இலாப வருமானம் | - | 54,000 |
| பதிவுக் கட்டணங்கள் | 1,897,963 | 2,508,824 |
| தொழிலாளர்களின் வாடகையும் அறவீடும் உதவிப் பணமும் | - | 222,388 |
| புலமைப்பரிசில் முறிகளிலிருந்து கிடைத்த வருமானம் | 88,630 | 1,161,556 |
| துங்கல்டக்மா பொருட்காட்சி | - | 2,331,525 |
| மேம்பால வாடகை | 223,726 | - |
| நானவித வருமானம் | 517,484 | 4,181,135 |
| | **25,910,734** | **22,187,333** |
| | | |
| **20. நிர்வாகச் செலவுகள்** | | |
| வேதனாதிகள் | 181,681,125 | 148,263,965 |
| நலன்புரி | 14,693,131 | 10,567,601 |
| காப்புறுதி | 769,259 | 4,973,344 |
| எரிபொருளும் உராய்வு நீக்கிகளும் ∴ பொருட்கள் | 26,620,047 | 23,583,846 |
| பழுது பார்த்தலும் பேணுகையும் | 6,480,476 | 5,525,211 |
| பிரயாணமும், உதவிப் படியும் | 1,148,984 | 1,100,052 |
| வெளிநாட்டுப் பிரயாணங்கள் | 2,570,559 | - |
| போக்குவரத்தும் வாடகைக் கட்டணங்களும் | 26,647,087 | 19,545,115 |
| உப ஒப்பந்த தொழிலாளர் | 733,764 | 1,545,095 |
| பொருட்கள் | 22,438,332 | - |
| பணிக்கொடை | 20,482,648 | (94,802,372) |
| தொழில்சார் கட்டணங்கள் | 3,425,710 | 2,673,558 |
| வங்கிக் கட்டணங்கள் தரகும் | 3,245,131 | 1,289,865 |
| சேவைகள் | - | 6,223,579 |
| அச்சிடலும் எழுது கருவி வகைகளும் | 12,177,483 | 7,812,964 |
| வீத வரிகளும் வரிகளும் | 1,961,019 | 1,994,989 |
| மின்சாரமும் நீரும் தொலைபேசியும் | 21,119,007 | 15,411,639 |
| தேய்மானம் | 9,295,267 | 8,322,544 |
| விளம்பரங்கள் | 18,106,528 | 9,271,201.00 |
| பதிவழிக்கப்பட்ட அறவிட முடியாக் கடன்கள் | 24,134,787 | 22,508,490 |
| வழக்கொழிந்த இருப்புக்களுக்கான ஏற்பாடு | 8,927,476 | 8,100,423 |
| வீதிகள் அபிவிருத்திச் செலவுகள் | 2,364,438 | - |
| உள்நாட்டு ஆலோசனைக் கட்டணங்கள் | - | 552,142 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | - | 550,000 |
| பற்று வரி | - | 1,332,793 |

| | | |
|---|---|---|
| | (119,290) | - |
| பயிற்சிக் கட்டணங்களும் சந்தாப் பணங்களும் | 2,357,896 | 1,284,613 |
| பத்திரிகைகள் | 88,267 | 36,856 |
| அஞ்சற் கட்டணங்களும் முத்திரைக் கட்டணங்களும் | 451,734 | 431,023 |
| வர்த்தக ஊக்குவிப்பு | 17,360,434 | 3,587,141 |
| ஏனைய செலவுகள் | 1,408,163 | - |
| நிர்மாண வரி | 1,221,278 | - |
| விளையாட்டுக்களும் பொழுதுபோக்கும் | 364,308 | - |
| சட்டக் கட்டணங்கள் | 3,540,815 | - |
| நன்கொடை | 3,928,800 | 2,245,377 |
| | **439,624,663** | **213,931,054** |
| **21. வட்டிச் செலவுகள்** | | |
| மேலதிக பற்று வட்டி | 12,751,184 | 2,449,230 |
| கடன் வட்டி | 3,067,273 | 4,008,219 |
| குத்தகை மீதான வட்டி | 1,894,276 | 3,305,629 |
| | **17,712,733** | **9,763,078** |
| **22. வட்டி வருமானம்** | | |
| நிலையான வைப்பு வட்டி | 2,443,385 | 16,893,034 |
| சேமிப்பு வட்டி - | - | 55,881 |
| இடர்கால கடன் வட்டி | 91,533 | 439,959 |
| றேப்போ வட்டி | 880,562 | 4,805,836 |
| | **3,415,480** | **22,194,710** |

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
## AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } විගණ /ඩී /රජ්ඉං /ඉංජි /2012

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2014 ඔක්තෝබර් 31දින

සභාපති,

ශ්‍රී ලංකා රාජ්‍ය ඉංජිනේරු සංස්ථාව.

ශ්‍රී ලංකා රාජ්‍ය ඉංජිනේරු සංස්ථාවේ 2012 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2) (සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව

---

සමාංක හා 2014 අගෝස්තු 20 දිනැති මාගේ ලිපියට යොමුවේ.

යථෝක්ත වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

එච්.ඒ.එස්.සමරවීර

විගණකාධිපති.

පිටපත් :- 1. ලේකම් - ඉදිකිරීම්, ඉංජිනේරු සේවා ,නිවාස හා පොදු පහසුකම් අමාත්‍යංශය

2. ලේකම් - මුදල් හා ක්‍රම සම්පාදන අමාත්‍යංශය

මගේ අංකය / எனது இல. / My No. } ஈஎச்/ம/எஸ்ஈசி/எப்ஏ/2012    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2014 ஆகஸ்ட் 20

தலைவர்,
இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

**இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 29(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2014 மே 06 ஆந் திகதி கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

1.4 **முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

கணக்கீட்டு நியம இல. 07 இன் பிரகாரம், மீளாய்வாண்டிற்கு உரித்தான காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளுக்கு உரித்தான ரூபா 38,609,803 தொகையான சீராக்கங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 15,869,110 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் இருப்பின் அதிகரிப்பு ரூபா 59,217,285 ஆன போதிலும் செயற்பாட்டு மூலதன மாற்றத்தில் இது ரூபா 21,394,983 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மூன்றாம் தரப்பினருக்கான கொடுப்பனவிற்காக ஒதுக்கங்கள், சேமலாப நிதியக் கொடுப்பனவிற்கான ஒதுக்கம் மற்றும் மரண உதவிக்கான ஒதுக்கம் மறைப் பெறுமதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதியான ரூபா 21,782,052 சீராக்கப்படாது காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டுக் கொள்கை இல. 1.2.2.6 இன் பிரகாரம், இருப்பு மீள்மதிப்பிடப்படுகையில் கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டும் பெறுமதி என்பவற்றில் குறைவான பெறுமதியில் இருப்பு மீள்மதிப்பிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் ரூபா 273.45 மில்லியன் பெறுமதியான முடிவுப் பொருட்கள் தொடர்பாக தேறிய கைக்கெட்டும் பெறுமதி கணிப்பிடப்பட்டு கிரயத்துடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்கீட்டுக் குறிப்பு இல. 1.2:2.14.8 இன் பிரகாரம், வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் வெவ்வேறாக இனங்காணப்பட்டு பெறுமதி இழப்பு செய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் கடன்பட்டோர் வெவ்வேறாக இனங்காணப்படாது 18 கடன்பட்டோருக்குரித்தாக மாத்திரம் ரூபா 24,134,787 தொகையான அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,866,794,458 தொகையான கடன்பட்டோர் மீதியில் ரூபா 129,533,365 பெறுமதியான வழமைக்குமாறான செலவு மீதிகள் காணப்பட்டன.

(ஆ) கொள்வனவு கட்டுநிதிக் கணக்கு, விசேட காசு முற்பணக் கணக்கு, உப ஒப்பந்தங்கள் வேலை ஆரம்பிப்பு முற்பணக் கணக்கு மற்றும் உழைப்பு உப ஒப்பந்த முற்பணக் கணக்கு போன்ற கணக்குகளில் ரூபா 17,472,644 கூட்டுத்தொகையான அசாதாரண செலவு மீதியும் உப ஒப்பந்த கடன்கொடுத்தோர் கணக்கு, வியாபாரக் கடன்கொடுத்தோர் கணக்கு மற்றும் ஏனைய வைப்புக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 566,851,864 தொகையான அசாதாரண வரவு மீதியுமாகக் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டின் போது நிர்மாணிப்புப் பிரிவில் 9 செயற்திட்டங்களின் ரூபா 22,182,118 கூட்டுத்தொகையான நடைபெறும் வேலைகளின் செயற்பாட்டு இலாபம் ரூபா 48,957,553 எனக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாபம் ரூபா 26,775,435 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இடையில் திணைக்களங்களுக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகள் ஆண்டின் இறுதியில் ஒன்றுடனொன்று சீராக்கப்பட வேண்டிய போதிலும் அவை சரியாக இணக்கம் செய்யப்பட்டிராமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 55,975,382 தொகையான திணைக்களங்களுக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு செலவு மீதி காணப்பட்டது.

(உ) பிற்போடப்பட்ட வரி கணிப்பிடப்படுகையில் ரூபா 278,682,273 பெறுமதியான நிலையான சொத்துக்களின் குறைத்தெழுதிய பெறுமதி கருத்திற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் பிற்போடப்பட்ட வரி சொத்துக் கணக்கு ரூபா 33,441,873 கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது இயந்திர உபகரணப் பிரிவிற்கு திறைசேரி ஏற்பாடு கிடைத்திராத போதிலும் ரூபா 17,798,294 தொகையான மீண்டெழும் மானியம் பெறப்பட்டதாகப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கு உரித்தான ரூபா 13,753,305 தொகையான தேறிய நட்டம் ரூபா 4,044,989 தேறிய இலாபமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) வருமான வரி ஒதுக்கக் கணக்கில் ரூபா 69,587,112 தொகையான ஆரம்ப மீதி ரூபா 64,377,329 ஆகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தமையால் அக் கணக்கு ரூபா 5,209,783 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) ரூபா 19,461,344 தொகையான தண்டப் பணம், உபசாரச் செலவினம், உள்நாட்டுப் பயிற்சிப் பாடநெறிக் கட்டணம், பணிப்பாளர் கட்டணம் மற்றும் படிப்பணம், ஏனைய செலவினத் தலைப்பிற்கு உள்ளடக்கப்படாது விற்பனைக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 2.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கணக்கு மீதிகள் உரிய துணைப் பதிவேடுகளுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விபரம் | கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள மீதி | துணைப் பதிவேடுகளின் படியான மீதி | வேறுபாடு அதிகரிப்பு/ (குறைவு) |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மூலப்பொருள் இருப்பு | 294,675,541 | 293,606,865 | 1,068,676 |
| வாடிக்கையாளருக்குச் செலுத்த வேண்டிய கணக்குகள் | 2,048,345,092 | 1,743,592,074 | 304,753,018 |
| வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டிய கணக்குகள் | 1,585,807,328 | 1,602,198,576 | (16,392,248) |
| கட்டிடங்கள் | 78,347,707 | 104,135,339 | (25,787,632) |
| கட்டிடங்களின் குறைத்தெழுதிய பெறுமதி | 39,804,869 | 42,180,574 | (2,375,705) |

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதன மாற்றம் தொடர்பான கூற்றில் முதலீடுகளின் நியாயப் பெறுமதி ரூபா 16,800,000 ஆன போதிலும் புதிய கணக்கீட்டு நியமத்தை முதற்றடவையாகப் பிரயோகிக்கையில் நிதிக்கூற்றுக்களுடன் அத் தினத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றில் இது ரூபா 607,200 ஆக ரூபா 16,192,800 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 5,720,868,660 தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் 95 சதவீதத்திற்கு மேலான அளவிலானோர் அரச நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவையாகக் காணப்பட்டன. அத் தொகையில் ரூபா 903,648,558 தொகை 03 ஆண்டுகள் பழமைவாய்ந்த கடன்பட்டோர் மீதியாகக் காணப்பட்டமையால் கடன் அறவிடப்படும் முன்னேற்றம் மிகக் குறைவான மட்டத்தில் நிலவுகையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23 சதவீதத்தினால் வியாபாரக் கடன்பட்டோர் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் வியாபாரக் கடன்கொடுத்தோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,555,880,876 மீதி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய ரூபா 1,193,502,684 தொகையான மீதியுடன் ஒப்பிடப்படுகையில் 30.36 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது.

(இ) உப ஒப்பந்தக் கடன்கொடுத்தோரான ரூபா 520,353,787 மீதியிலும் இயந்திர உபகரணப் பிரிவின் கடன்கொடுத்தோரான ரூபா 267,702,959 மீதியிலும் ரூபா 145,027,411 தொகையான 05 ஆண்டுகள் பழமைவாய்ந்த மீதிகளைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் 2000 ஆம் ஆண்டு முதல் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 20,557,709 தொகையும் இதில் அறவிடப்பட வேண்டிய ரூபா 5,356,353 தொகையும் தொடர்ந்து முன்கொண்டுவரப்பட்ட போதிலும் இதனைத் தீர்ப்பதற்கோ அல்லது அறவிடப்படுவதற்கோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2007 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே நிலவி வரும் வைத்திய லீவுக் கொடுப்பனவு ஒதுக்கக் கணக்குகளில் ரூபா 3,484,772 தொகையான மீதி மீளாய்வாண்டின் இறுதியிலும் சீராக்கப்படாது நிலவியது.

(ஊ) 2005 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்த தலதா மாளிகை கட்டுப்பாட்டுக் கணக்கு, பௌத்த சாசன அமைச்சின் கட்டுப்பாட்டுக் கணக்கு, உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கணக்கு மற்றும் கட்டிடத் திணைக்களக் கணக்கு போன்ற கணக்குகளுக்குரிய செலுத்தப்பட வேண்டிய ரூபா 9,129,116 தொகையான பணம் தீர்க்கப்படுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2011 ஆம் ஆண்டு முதல் செலுத்தப்பட வேண்டியதாகக் கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 233,099,481 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 58 வேலைத்தளங்களில் உப ஒப்பந்தக்காரர்களுக்காக 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் நிலுவைக் கொடுப்பனவாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 9,614,881 தொகையான மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 முற்பணக் கொடுப்பனவு நடவடிக்கைகள்

கூட்டுத்தாபனத்தினால் பல்வேறு நோக்கங்களுக்காக பாரியளவு முற்பணங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டிருந்ததுடன் வழங்கப்படும் முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்கு போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணக் கணக்குகளின் மீதி ரூபா 21,702,334 ஆகவும் முன்னைய ஆண்டின் இறுதித் திகதியில் மீதி ரூபா 14,666,769 ஆகவும் காணப்பட்டமையால் 48 சதவீத அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொருட்கள் பெறுவதற்கு முன்னர் கட்டளையுடன் காசோலைகள் வழங்கப்படுதல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கட்டளையுடன் வழங்கப்பட்ட காசோலை முற்பணக் கணக்கு மீதி ரூபா 745,091,798 ஆகக் காணப்பட்டதுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இக் கணக்கின் மீதி ரூபா 423,598,569 ஆகக் காணப்பட்டது. முன்னைய

ஆண்டுடன் ஒப்பிடுகையில் காசோலை முற்பணக் கணக்கு மீதி 76 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தால் உப ஒப்பந்தங்களுக்காக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக வழங்கப்பட்ட பணம் குறித்த காலப்பகுதியின் போது தீர்க்கப்படாதமையால் கணக்குகளில் முற்பண மீதி ஆண்டுதோறும் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உப ஒப்பந்த வேலை ஆரம்பிப்பு முற்பணப் பெறுமதி ரூபா 242,269,162 ஆகக் காணப்பட்டது. உழைப்பு உப ஒப்பந்தக்காரர்களுக்காக வழங்கப்பட்டிருந்த வேலை ஆரம்பிப்பு முற்பணப் பெறுமதியில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் தீர்க்கப்பட்டிராத முற்பண மீதி ரூபா 264,371,467 ஆகக் காணப்பட்டது.

### 2.2.7 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்களிற்கு எதிரே காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | நிதிக்கூற்றுக்களிலுள்ள விடயங்கள் | பெறுமதி<br>ரூபா<br>மில்லியன் | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | நாரஹென்பிட்டி செயற்பாட்டுப் பிரிவு வேறு இடத்திற்கு மாற்றப்பட்டமையால் ஏற்பட்ட மூலதனப் பெறுவனவுகள் | 22.65 | பெறுவனவு பாய்ச்சல் மற்றும் ஒப்படைப்புப் பதிவேடு உள்ளடக்கப்பட்ட கோவைகள் |
| (ஆ) | காசு மற்றும் காசிற்குச் சமனானவற்றில் உள்ளடக்கப்பட்ட 9934 ஆம் இலக்கக் கணக்கின் மீதி | 1.88 | வங்கிக் கூற்றுக்கள், வங்கிக் கணக்கிணக்கம், மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| (இ) | வரையறுக்கப்பட்ட இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் (கட்டார்) கம்பனியின் முதலீட்டுக் கணக்கின் மீதி | 5.95 | வங்கி உறுதிப்படுத்தல்கள், வைப்புச் சான்றிதழ்கள், மீதி மீட்பு அறிவிப்பு, செலவு அறிவுறுத்தற் பத்திரம் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணம் | 21.7 | பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு |
| (உ) | முடிவுப் பொருள் இருப்பு | 75.09 | இருப்பு மெய்மையாய்வு கோவை |
| (ஊ) | முடிவுப் பொருள் இருப்பு (ஏகல செயற்பாட்டுப் பிரிவு வேலைத் தளம்) | 122.98 | இருப்பு மதிப்பீட்டு பதிவேடு |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாண இல. 756 | ரூபா 16,358,641 பெறுமதியான மூலப் பொருள் இருப்பிற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2004 ஏப்ரல் 28 ஆம் திகதிய பீஊ/356/303/23 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் கடிதம் | சுய விருப்பில் ஓய்வடையும் திட்டத்தின் கீழ் திறைசேரியிலிருந்து பெறப்பட்டிருந்த பணத்தில் எஞ்சிய மீதியான ரூபா 20,278,812 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் மீள அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2011 பெப்ரவரி 11 ஆம் திகதிய பீசம/பீசஎன்/2011/01 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கூட்டுத்தாபனத்தால் வருடாந்த பிரசுரிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன் மதிப்பிடப்பட்ட செலவினம் மீறப்படுவது தொடர்பாகவும் திட்டமிடல் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாது ரூபா 37.94 மில்லியன் தொகையான பிரசுரிப்பு செலவினம் ஏற்கப்பட்டிருந்தது. |

(ஆ) 2006 சனவரி 25 ஆம் திகதிய 8 ஆம் இலக்க அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவை

(i) 2.14.1 ஆம் பந்தி

விலை மனுக்கோரல் முறை பின்பற்றி ஒப்பந்தக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுகையில் ICTAD இல் பதிவாகிய ஆகக்குறைந்தது 5 ஒப்பந்தக்காரர்களிடமிருந்தேனும் வெவ்வேறாக விலைமனுக் கோரப்பட்டிருக்க வேண்டிய போதிலும் உடவலவை வலது பக்க வீதி தாரிடல் செயற்திட்டத்தில் ரூபா 48.701 மில்லியன் பெறுமதியான 10 உப ஒப்பந்தங்கள் வழங்கப்படுகையில் மூன்று ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மாத்திரம் விலைமனுக் கோரப்பட்டிருந்தது.

(ii) 3.2.1 பந்தி

மீளாய்வாண்டின் போது ரூபா 47,612,407 தொகையான மூலதன சொத்துக்கள் கொள்வனவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது, கொள்வனவுகளின் போது பின்பற்றப்பட வேண்டிய தேசிய போட்டி விலை முறைக்கு மாறாக ஒரு வழங்குனர் அல்லது இரு வழங்குனர்களிடமிருந்து மாத்திரம் விலை மனுக் கோரப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 225.90 மில்லியன் தொகையான தேறிய இலாபத்தைக் கொண்டிருந்ததுடன் இதற்கு ஒப்பான முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 347.77 மில்லியனானமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 121.87 மில்லியன் தொகையான குறைவைக் காண்பித்திருந்தது. இதற்காக பின்வரும் விடயங்கள் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) கடந்த 4 ஆண்டுகளுக்காக கூட்டுத்தாபனத்தின் தேறிய செயற்பாட்டு இலாபத்திற்கு ஒப்பாக நிர்வாகச் செலவினம் வழமைக்கு மாறாக அதிகரித்திருந்ததுடன் சதவீதமாக 54 சதவீதம் முதல் 274 சதவீதம் வரை பாரியளவில் மாற்றங்களுக்கு உட்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் நிர்வாகச் செலவினம் தேறிய செயற்பாட்டு இலாபத்தைப் போன்று இரட்டிப்பாகியிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் நிர்மாணிப்புகள், மின்சார மற்றும் இயந்திர மற்றும் நிர்மாணிப்பு உதிரிப்பாகங்கள் போன்ற பிரிவுகளின் தேறிய செயற்பாட்டு இலாபம் முறையே 68 சதவீதத்தாலும், 97 சதவீதத்தாலும், 31 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) மின்சார மற்றும் இயந்திர பிரிவுகளின் தேறிய வருமானம் 2011 ஆம் ஆண்டைத் தவிர ஏனைய சகல ஆண்டுகளின் போதும் தொடர்ந்து குறைவடைந்திருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது தேறிய வருமானத்தின் வீழ்ச்சி 72 சதவீத அளவில் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாத்தளை டொலமைட் செயற்பாட்டுப் பிரிவின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் கடந்த 15 ஆண்டுகளில் 2006 ஆம் ஆண்டு தவிர்ந்த ஏனைய சகல ஆண்டுகளிலும் நட்டத்தில் இயங்கியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதான நட்டம் ரூபா 856,203 ஆகவும் திரண்ட நட்டம் ரூபா 38.4 மில்லியன் தொகையாகவும் காணப்பட்டன.

(ஆ) தங்கொட்டுவ செங்கல் மற்றும் தளபாட உற்பத்திப் பிரிவு மீளாய்வாண்டின் போது ரூபா 2.3 மில்லியன் தொகையான நட்டத்தை அடைந்திருந்ததுடன் கடந்த 15 ஆண்டுகளில், 14 ஆண்டுகளிலும் நட்டத்தை அடைந்திருந்தது. அதன் திரண்ட நட்டம் ரூபா 25.75 மில்லியன் தொகையாகும். 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது செங்கற்களின் வெளி விற்பனை வருமானம் ரூபா 3,446,645 முதல் ரூபா 376,192 வரை குறைவடைந்திருந்ததுடன் இது 89

சதவீதத்தினாலான குறைவாகும். மீளாய்வாண்டின் போது எவ்வித தச்சு உற்பத்தியும் வெளியில் விற்பனை செய்யப்பட்டிராததுடன் வேலைத் தளத்தின் மொத்தச் செலவினம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 50 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) நிர்மாணப் பிரிவிற்கு உரித்தான இரத்மலானை வேலைத்தளம் 2011 ஆம் ஆண்டைப் போன்று மீளாய்வாண்டின் போதும் எவ்வித வெளி விற்பனையையும் மேற்கொண்டிராததுடன் ரூபா 54,037,300 தொகையான மொத்த விற்பனை உள்ளக விற்பனையாகக் காணப்பட்டன. வேலைத்தளத்தின் வருமானம் கடந்த ஆண்டைப் பார்க்கிலும் 15 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் விற்பனைக் கிரயம் 35 சதவீதத்தால் அதிகரித்திருந்தமையால் செயற்பாட்டு இலாபம் 63 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

(ஈ) இயந்திர மற்றும் மின்சாரப் பிரிவிற்கு உரித்தான பேலியகொடை வேலைத் தளத்தில் முன்னைய ஆண்டில் ரூபா 6,331,660 தொகையான செயற்பாட்டு இலாபம் மீளாய்வாண்டின் போது 95 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

(உ) இயந்திர மற்றும் மின்சாரப் பிரிவிற்கு உரித்தான இரத்மலானை வேலைத் தளத்தின் வருமானம் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக 39 சதவீதத்தால் குறைவடைந்த போதிலும் விற்பனைக் கிரயம் 19 சதவீதத்தாலும் ஏனைய செலவினம் 356 சதவீதத்தாலும் அதிகரித்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 12.4 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஊ) நிர்மாணிப்பு உதிரிப்பாகப் பிரிவிற்கு உரித்தான பேலியகொட செயற்பாட்டு வேலைத் தளத்தின் வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 78 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3.3 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(எ) இயந்திர உபகரணப் பிரிவின் 7 டிப்போக்களும் 05 வேலைத் தளங்களினதும் முறையே ரூபா 11.71 மில்லியன் தொகையும் ரூபா 90.59 மில்லியன் தொகையுமாக நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் 02 டிப்போக்களில் எவ்வித வருமானமும் மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரசட்டத்தின் 153 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் வரி நெறிப்படுத்தல் பெற்றிருந்த போதிலும் சேவையைப் பெற்றுக்கொள்ளும் நிறுவகம் முறையாக அறிவுறுத்தப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் பிடித்து வைத்தல் வரியான ரூபா 56,728,900 தொகையை சேவையைப் பெற்றுக்கொள்ளும் நிறுவகத்தால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான வைப்பு வட்டி வருமானத்திலிருந்து பிடித்து வைத்தல் வரி கழிக்கப்படுவது தடுக்கப்படுவதற்கான நெறிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு கூட்டுத்தாபனம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு 2011 திசெம்பர் 16 ஆம் திகதி சமர்ப்பித்திருந்த விண்ணப்பப்பத்திரம், கூட்டுத்தாபனம் தமது வரிப் பொறுப்பை முறையாக நிறைவேற்றாமை, எனும் காரணத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது. 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதித்திகதி வரை வங்கியால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்திருந்த வட்டி வருமானத்திலிருந்தான பிடித்து வைத்தல் வரிக் கணக்கின் திரண்ட மீதி ரூபா 6,478,966 வரிப் பொறுப்பாகத் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சரியாக இனங்காணப்படாது ரூபா 9.5 மில்லியன் தொகையான வரிக்காக 2003 ஆம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் இது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெறுமதி சேர் வரி கணிப்பிடப்பட்டு செலுத்தப்படுகையில் ரூபா 29,516,563 தொகையான உள்ளீட்டு வரிப் பெறுமதி கருத்திற்கொள்ளப்படாது செலுத்தியதன் காரணமாக ரூபா 20,665,484 தொகையான பெறுமதி சேர் வரித் தொகை 2002 ஆம் 2003 ஆம் ஆண்டுகளின் போது மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் இத் தொகையை தீர்த்துவைப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(உ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2012 நவம்பர் 09 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் பெருமளவு வரிப் பட்டியல்களை முறைப்படி தீர்த்துவைப்பதற்கு முடியாது போனமையால் நிலுவையான புரள்வு வரி, பாதுகாப்பு வரி, தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி, பெறுமதி சேர் வரி மற்றும் சிக்கன சேவைக் கட்டணம் என ரூபா 89,421,863 தொகையான தண்டப்பணத்துடன் சேர்த்து ரூபா 415,954,164 தொகையான வரிப் பொறுப்புகள் ஏற்பட்டிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) செலுத்த வேண்டிய ஏனைய வரிப் பொறுப்புகளின் கீழ் காண்பிக்கப்பட்ட பல வருட காலமாக நிலவிவரும் ரூபா 3,739,236 தொகையான செலுத்தப்படாத வரிப் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியிலும் நிலவியது.

(எ) கூட்டுத்தாபனத்தின் கணக்கின் பிரகாரம், கட்டிடங்களின் குறைத்தெழுதிய பெறுமதி ரூபா 22,937,054 ஆன போதிலும் இது ரூபா 2,157,698 தொகையான மறைப் பெறுமதியாகக் காண்பிக்கப்பட்டு பிற்போடப்பட்ட வரி கணிப்பிடப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

கூட்டுத்தாபனத்தின் தலைமைக் காரியாலயம், 08 வேலைத்தளங்கள் மற்றும் 9 பிராந்தியக் காரியாலயங்கள் இயங்கும் 35 ஏக்கர் அளவிலான காணிக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சட்டரீதியான உரித்துப் பெறப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 யூன் 16 ஆம் திகதி முதல் 2012 யூன் 15 ஆம் திகதி வரையான ஒரு வருட காலப்பகுதிக்காக மாத்திரம் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ஆயுட் காப்புறுதியும் மருத்துவக் காப்புறுதியும் வழங்கப்படுவதற்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 5,885,178

கூட்டுத்தொகையான பணம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இக் காப்புறுதி 2012 யூன் 15 ஆம் திகதியின் பின்னர் செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஒரு செயற்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினத்தில் ரூபா 25 மில்லியன் தொகையான சேமிப்புகள் தொடர்பான பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்படுவதற்காக ரூபா 1,960,272 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) வெளிநாட்டு வேலையில் ஈடுபடுவதற்காக சம்பளமற்ற லீவைப் பெற்றுக்கொள்ளும் ஊழியர் 2012 ஆகஸ்ட் 15 ஆம் திகதி சேவைக்குச் சமூகமளிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவர் சேவைக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. அவரிடமிருந்து அறவிடப்பட உள்ள ரூபா 351,973 தொகை பிணை பிணையாளிகளிடம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டின் போது வெளிநாடுகளில் நிர்மாணச் செயற்திட்டங்களை ஆரம்பித்து வருமானத்தை ஈட்டுவதற்கு கூட்டுத்தாபனம் ஊக்கம் எடுத்திருந்ததுடன் இதற்காக ரூபா 13,130,730 தொகையான பணம் செலவிடப்பட்டிருந்தது. எனினும் எந்தவித வெளிநாட்டு நிர்மாணிப்பையும் ஆரம்பிப்பதற்கோ, ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்வதற்கோ, வருமானத்தை உழைப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாதுபோயிருந்ததுடன் ஏற்கப்பட்ட சகல செலவினங்களும் விளைவற்ற செலவினமாகக் காணப்பட்டது.

(ஆ) நிர்மாண ஒப்பந்தங்களைக் குறித்த காலத்தின் போது பூர்த்தி செய்யாததன் விளைவாக வேலைத் தாமதக் கட்டணமாக ரூபா 11,313,468 தொகை மீளாய்வாண்டின் போதும் செலுத்தப்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு நேர்ந்தது.

(இ) சிவில் வேலைகளை விரிவுபடுத்தும் நோக்கில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி 49 பேர் விற்பனை மேம்பாட்டு உத்தியோகத்தர்களாக ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 15,305,200 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மாத்தளை தங்கொடுவ போன்ற பகுதிகளில் உள்ள உற்பத்தி வேலைத்தளத்தில் மீளாய்வாண்டின் போது கிரயம் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் அதிகரிப்பின்றி தொடர்ந்து நட்டத்தை ஏற்கும் நிலையில் நிலவியதுடன் புதிய செயற்திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்படாது ஆண்டின் போது வியாபார மேம்பாட்டுச் செலவினமாக ரூபா 47,361,550 ஏற்கப்பட்டிருந்தது.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக போதிய முகாமைத்துவ நடைமுறை பின்பற்றத்தவறியமையால் மீளாய்வாண்டின் இறுதித்திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் நடைபெறும் 28 செயற்திட்டங்களுக்காக ரூபா 215.98 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) கேள்விப் பெறுமதி ரூபா 1,444 மில்லியன் தொகையான கெத்தாராம சர்வதேச கிரிக்கட் விளையாட்டரங்கை நவீனமயமாக்கும் வேலைத்தளத்தில், செய்யப்பட்ட வேலைப் பெறுமதி ரூபா 1,408 மில்லியன் தொகைக்காக பெற வேண்டிய பெறுமதி சேர் வரித் தொகையான ரூபா 168.99 மில்லியன் தொகையான மொத்த வரித் தொகையும் இலங்கை கிரிக்கட் நிறுவகத்தால் கூட்டுத்தாபனத்திற்குப் பெறப்பட்டிருக்கவில்லை. இதற்குக் காரணமாக கிரிக்கட் நிறுவகத்திற்கு பெறுமதி சேர் வரி விலக்குக் கிடைப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனினும், நிதி, திட்டமிடல் அமைச்சுப் பணிப்பாளர் நாயகத்தின் எப்பீ06/20/03/03/19 (எஸ்பீ – அத் ii) ஆம் இலக்க கடிதத்தின் படி 2011 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் 2011 மே 01 ஆம் திகதி வரையான மூன்று மாதங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்காக மாத்திரம் இலங்கை கிரிக்கட் நிறுவகத்திற்கு வரி விலக்குக் கிடைக்கப்பெற்றிருந்தமையால்

இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மேற்குறித்த செயற்பாடுகளுக்காக வரி விலக்கு பெறப்பட்டிராமை தெளிவாகியது. இச் செயற்திட்டத்திற்கு உரித்தாக செய்யப்பட்ட வேலைக்காக பெறுமதி சேர் வரி இன்றி மேலும் ரூபா 321.5 மில்லியன் தொகை 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் கூட்டுத்தாபனத்திற்கு இலங்கை கிரிக்கட் நிறுவகத்தால் கிடைக்கப்பெற வேண்டியிருந்தது.

## 4.7 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 18 நிர்மாண ஒப்பந்தங்களுக்காக கேள்விப் பெறுமதிக்கு மேலாக செலவிடப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 180.67 மில்லியன் தொகையான நட்டம் கூட்டுத்தாபனத்திற்கு நேர்ந்தது.

(ஆ) ரூபா 133.74 மில்லியன் தொகையான திரண்ட செலவினம் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பிரிவின் 22 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு தொழில் வழங்குனரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 919,860,187 கூட்டுத்தொகையான திரண்ட கிரயத்தை ஏற்ற 34 செயற்திட்டங்கள் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(ஈ) கூட்டுத்தாபனத்தால் பொறுப்பேற்கப்பட்ட சில நிர்மாணிப்பு நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தின் ஆலோசனைப் பிரிவால் மேற்கொள்ளப்படும். மேற்கொள்ளப்பட்ட வேலைக்காக நிர்மாணிப்புப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட பட்டியல்கள் ஆலோசனைப் பிரிவால் 21 ஆம் திகதிக்கு முன்னர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் ரூபா 197,362,608 பெறுமதியான 23 செயற்திட்டங்கள் பட்டியல்கள் சமர்ப்பித்திருந்த போதிலும் உறுதிப்படுத்தல் 02 மாதங்கள் முதல் 02 ஆண்டுகள் வரையான காலவீச்சில் தாமதமானமை தொழில் தருனரால் பணம் பெறுமதில் ஏற்பட்ட தாமதத்திற்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

**4.8 வேறு அரச நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய இல. பீஈடி/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2012 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் மாத்திரம் கூட்டுத்தாபனத்தினால் 25 வாகனங்கள் நிர்மாணிப்பு மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் இவ்வாகனங்களிற்கான எரிபொருள் செலவினமும் வாடகைக் கட்டணமுமாக ரூபா 9,910,467 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான வாகனம் அமைச்சால் விடுவிக்கப்படுவது தொடர்பான தகவல்கள் கோரப்பட்ட போதிலும் அத் தகவல்கள் 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரிசை அமைச்சின் ஒருங்கிணைப்பு செயலாளர்கள் இருவருக்கு ஆண்டின் போது ரூபா 1,200,000 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**4.9 கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களிற்கு மாறாக செலவிடல்**

கம்பஹா மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 1,155,000 தொகை மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு மாறாக செலவிடப்பட்டிருந்தது.

**4.10 மனித வள முகாமைத்துவம்**

| பதவியணியினர் விபரம் | அங்கீகரித்த எண்ணிக்கை | 2012.12.31 இல் உள்ளவாறானது | 2013.12.31 இல் உள்ளவாறானது |
|---|---|---|---|
| நிரந்தரம் | 2623 | 2091 | 2012 |
| ஒப்பந்தம் | 260 | 908 | 1076 |
| அமைய | - | 21 | 14 |
| கூட்டுத்தொகை | 2883 | 3020 | 3102 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித்திகதி வரை கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2883 ஆன போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பதவியணி 3020 ஆக இருந்தது. ஆகையால் அங்கீகரிக்கப்பட்ட பதவணிக்கு மேலாக 137 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மேலாக 219 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் கூட்டுத்தாபனத்தின் சேவைக்கு அங்கீகாரமின்றி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த ஊழியர் எண்ணிக்கை 648 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ் எண்ணிக்கை 816 வரை உயர்வடைந்திருந்தது.

(இ) 2009 நவம்பர் 25 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ3/43/4/265/1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி பதவிகள் ஏற்படுத்தப்படவோ அல்லது வெற்றிடங்கள் நிரப்பப்படலாகாது என குறிப்பிடப்பட்ட போதிலும் அங்கீகரிக்கப்படாத 22 பதவிகள் ஏற்படுத்தப்பட்டு இதற்காக 106 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 45,016,764 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பதவி எண்ணிக்கை 32 வரை அதிகரித்திருந்ததுடன் ஆட்சேர்க்கப்பட்ட 197 பதவியணியினருக்காகச் செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 62,949,396 ஆகக் காணப்பட்டது.

(ஈ) 2011 பெப்ரவரி 14 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ3/43/4/265/1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் ஆட்சேர்க்கக் கூடிய நிரந்தர பயிற்சிபெறாத பதவியணியினர் 500 முதல் 460 வரை குறைத்து திருத்தப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆம் மற்றும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதிகளில் சேவையில் ஈடுபட்ட பதவியணி முறையே 775 ஆகவும் 706 ஆகவும் காணப்பட்டது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட

எண்ணிக்கைக்கு மேலாக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பள அளவு முறையே ரூபா 5,748,750 ஆகவும் ரூபா 4,489,500 ஆகவும் காணப்பட்டது.

(உ) 2012 திசெம்பர் 24 ஆம் திகதிய 49 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு முரணாக ஒருவருக்கு ரூபா 10,000 தொகையான ஊக்குவிப்புப் படியாக 2482 ஊழியர்களுக்கு ரூபா 6,205,000 கூட்டுத்தொகை பணிப்பாளர் சபை அங்கீகாரத்தில் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறே 2012 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தின் போது ரூபா 14,025,000 தொகை ஊழியர்களுக்குப் படியாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அக் கொடுப்பனவிற்கு அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. ஆகையால் சுற்றறிக்கைக்கு மாறாகச் செலுத்தப்பட்ட மொத்த ஊக்குவிப்புத் தொகை ரூபா 20,230,000 ஆகக் காணப்பட்டது.

(ஊ) கூட்டுத்தாபனத்தின் உயர் முகாமைத்துவத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 04 பிரதிப் பொது முகாமையாளர் பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் வரைவுக் கணக்கறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 320 நாட்கள் தாமதத்தின் பின்னர் அதாவது 2014 சனவரி 17 ஆம் திகதி 2012 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டுத்திட்டம்

2007 திசெம்பர் 18 ஆம் திகதிய பீஈடீ/ 47 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரமும் அரச முயற்சிகள் திணைக்களத்தின் நல்லாளுகை தொடர்பான வழிகாட்டியின் 05 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், நாளதுவரையாக்கப்பட்ட கூட்டுத்திட்டம் குறிப்பிடப்பட்ட வகையில் விபரமாக தயாரிக்கப்பட்டு நிதியாண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு 15

நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பொது முயற்சிகள் செயற்பாட்டுக் குழுச் செயலாளர் மற்றும் அதன் ஓர் பிரதி பொது முயற்சிகள் திணைக்களச் செயலாளருக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்காததுடன் 2012 - 2015 வரையான காலப்பகுதிக்காக மீளாய்வாண்டின் ஒக்டோபரில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூட்டுத்திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1957 இன் 49 ஆம் இலக்க கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் படி பின்வரும் நோக்கங்கள் கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(i) பெற்றோலிய உற்பத்தி விற்பனைக்கான வசதிகளுடன் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் திருத்தவேலைகளுக்கான நிலையம் ஒன்றை நடாத்தல்.

(ii) தொழில்நுட்ப நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் எவ்வித வகையையேனும் சார்ந்த உபகரணங்களோ அல்லது இயந்திர உபகரணங்களோ அல்லது தொடர்பான உதிரிப்பாகங்களோ அல்லது கருவிகளும் துணைக்கருவிகளுமோ தயாரிக்கப்படும் ஓர் செயற்திட்டம் நடாத்தப்படுவதாகவோ அல்லது கம்பனியாலோ அல்லது நபர்களுக்கான முகவர் நிறுவகமாகச் செயற்படல்.

(ஆ) 2007 திசெம்பர் 18 ஆம் திகதிய பீஈடீ/47 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) கூட்டுத்திட்டத்தின் செயற்பாடுகள் செயற்பாட்டுத்திட்டத்திலும் பாதீட்டிலும் சம்பந்தப்பட்ட இணைப்பு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) குறித்த ஆண்டின் முடிவில் கூட்டுத்திட்டத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பான முன்னேற்றத்தையும்

செயற்படாத மற்றும் மந்த நிலையில் செயற்படும் பிரிவுகள் தொடர்பாகவும் மதிப்பிட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிராததுடன் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கும் இது உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயற்பாடுகளுக்கு உரித்தாக ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் உத்தியோகத்தர்கள் எய்த வேண்டிய இலக்குகளையும் செயற்திறனையும் காண்பித்திருந்த போதிலும் உரிய இலக்குகள் போதியளவு பெறுமதியுடையவையாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலாப நட்டக் கூற்றில் குறிப்பிடப்பட்ட செயற்பாட்டு இலாபங்கள் எவ்வாறு பெறப்பட்டன என்பது குறித்து ஒவ்வொரு ஆண்டும் அவற்றில் உள்ள உள்ளகத் தொடர்பு தெளிவாக்கப்படவில்லை.

(உ) செயலாற்றல் மதிப்பீட்டிற்கு உரித்தான முக்கிய கணிப்பீட்டு அளவைகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 செயற்பாட்டுத் திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் 2006 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த கூட்டிணைந்த திட்டமும் செயற்பாட்டுத்திட்டமும் தயாரிக்கப்படாது செயற்பட்டமையால் நிறுவனத்தின் நோக்கின் படி நடவடிக்கை எடுத்திராமை அவதானிக்கப்பட்டது.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வருடாந்தக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளில் செயலாற்றல் கணக்காய்விற்குப் போதுமானளவு

கவனம் கோரப்பட்டிராததுடன் செயலாற்றல் மதிப்பீட்டிற்கு கணக்காய்வு ஐயவினாக்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நானாவித பிரிவின் கீழ் செயற்படும் உற்பத்திப் பிரிவுகளின் இலாபம் மற்றும் செயலாற்றல் மதிப்பீட்டிற்கு உட்பட்ட கணக்காய்வுச் செயற்பாடுகள் பல கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அப் பிரிவு 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக தொடர்ந்து நட்டத்தை ஏற்றிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தால் நானாவித நிகழ்ச்சிகளுக்காக முற்பணம் வழங்குதல், முற்பணத் தீர்ப்பனவு மற்றும் இதற்காக நிலவும் உள்ளகக் கட்டுப்பாடுகள் போதிய கண்காணிப்பிற்குரிய பல கணக்காய்வுச் செயற்பாடுகள் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் கடந்த பல வருட காலமாக தீர்க்கப்படாத முற்பண மீதி தொடர்ந்து உயர்வடைந்திருந்ததுடன் முற்பண நடவடிக்கைகள் தொடர்பாக நிலவும் கட்டுப்பாட்டு முறைமையில் குறைபாடுகள் பலவும் கண்டறியப்பட்டன.

## 5.5 கொள்வனவுத் திட்டம்

2006 சனவரி 25 ஆம் திகதிய அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டிக் கைநூலின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் 2012 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

கூட்டுத்தாபனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான வருமானமும் இலாபமும் பாதீடப்பட்ட தொகைகளுடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 1264.70 மில்லியன் தொகையும் ரூபா 185.65 மில்லியன் தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இதன் பிரகாரம், பாதீட்டு யதார்த்தமாகத் தயாரிக்கப்பட்டிராததுடன் இது ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.7 வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

கூட்டுத்தாபனத்தால் 2011 ஆம் ஆண்டிற்கு உரித்தான வருடாந்த அறிக்கை 2014 மார்ச் 31 இல் உள்ளவாறும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் தொடர்பாக நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட விபரமான அறிக்கையின் மூலம் கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) இருப்புக் கட்டுப்பாடு
(ஆ) முற்பண நடவடிக்கைகள்
(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்
(ஈ) நிதி முகாமைத்துவம்
(உ) வரி முகாமைத்துவம்
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு மற்றும் கூட்டிணைந்த திட்டம்
(எ) கொள்வனவு நடைமுறை
(ஏ) ஒப்பந்த கட்டுப்பாடு

ஒப்பம்: எச்.ஏ.எஸ் சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*